ARULTHARUMDEIVAM

அருள்தரும்

தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மலர்-1 Volume-1 | இதழ்-19 Issue-19 | 7 ஏப்ரல்-2026 7 April-2026 | விலை-20/- Price: 20/-

ஏழு கோடி மஹா ருத்திரம் ஜபித்தத்தின் பலன் தரும்

கிருத்தி வாசேஸ்வரர்

அருள்தரும்

தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்
அருள்தரும் தெய்வம்
இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்
அலைபேசி எண்: 9337501889

மன கலக்கம் தீர்க்கவேண்டுமா?

அந்த மஹான் மிகவும் சக்தி உள்ள பெரிய ஞானி என்று கேள்விப்பட்ட செல்வந்தன் ஒருவன், ஆயிரம் பொற்காசுகளை எடுத்துக் கொண்டு, அவருக்கு பரிசளிப்பதற்காக, அவரைப் பார்க்கப் போனான்.

ஆனால், அவர், "எனக்கு இவை எல்லாம் தேவை இல்லை" என்று சொல்லி விட்டார்.

அதற்கு அந்த செல்வந்தன்,

'எனக்கு அவ்வப்போது மனதில் கலக்கமும், தேவை இல்லாத துயரமும், சஞ்சலமும் ஆட் கொள்கிறது. அதைதான் உங்களிடம் சொல்ல வந்தேன். வெறும் கையுடன் வருவதற்கு மனமில்லாமல் இந்த பொற்காசுகளை கொண்டுவந்தேன். தவறாக நினைக்க வேண்டாம்.'என்றான்.

'சரி. உன் மனதை மேலும் காயப்படுத்த விரும்பவில்லை. அதனால், இதனைப் பெற்றுக் கொள்கிறேன்.' என்று சொன்ன ஞானி,

அந்த பொற்காசுகளை கையில் வாங்கிக் கொண்டார்.

'இனிமேல் இந்த பொற்காசுகள் என்னுடையது தானே? உனக்கு இனி சொந்தமில்லையே?'

'ஆமாம். ஆயிரம் பொற்காசுகளையும் தங்களிடம் கொடுத்து விட்டேன். இனி, இவை உங்களுடையது தான்.'

'அப்படியானால் ஒன்று செய். இந்த ஆயிரம் பொற்காசுகளையும், அதோ அந்த நதியில் வீசி விட்டு, என்னிடம் வா ' என்றார் ஞானி.

செல்வந்தன் அதிர்ச்சி அடைந்தான்... இருப்பினும், வேறு வழியில் லாமல் ஞானியிடம் பொற்காசு களை வாங்கிக் கொண்டு, அந்த செல்வந்தன், நதியை நோக்கி நடந்தான். வெகு நேரம்ஆகியும், செல்வந்தன், திரும்பவராதது கண்டு, ஆற்றங்கரைக்கு சென்றார் ஞானி. அங்கு, அந்த செல்வந்தன் தன்னிட மிருந்தபொற்காசு களை ஒவ்வொன்றாக எண்ணியபடி ஆற்றில் வீசிக் கொண்டிருந்தான்.

ஞானியை பார்த்ததும் எழுந்து நின்று வணங்கினான்.

'என்ன செய்து கொண்டிருக்கிறாய்? தூக்கி எறிந்து விட்டு வர சொன்னேன் இல்லையா?'

'உண்மைதான். ஆனால், இவை எல் லாம் எனது சம்பாத்தியம். உங்களுக்கு உபயோகப் படும் என்று நினைத்துதான் தங்களிடம் எடுத்து வந்தேன். இப்போது ஆற்றில் வீசுவதற்கு மனமில்லாமல் வீசிக் கொண்டிருக்கிறேன்.'

ஞானி அமைதியாக சொன்னார்.

'அது போலதான் உன் மனதின் கலக்கமும், துயரமும். உனது சம்பாத்தியம்தான். ஆனால், அவை உன்னுடையது அல்ல. இருந்தாலும், உன் மனம், அதனுடைய சொந்த சொத்து போல, கலக்கங்களையும், துயரங்களை யும் முழுவதுமாக தூக்கி எறிய மறுக்கிறது.

இவை நமக்குத் தேவை இல்லை.

இவைகள் எல்லாம் இழக்க பட வேண்டியவை என்று எதை நாம் மனதால் நினைக்கிறோமோ,

அதை, மனதில் இருப்பதை எல்லாம் முழுவதையும் ஒரே முறையில் தூக்கி எறிந்து, இழந்துவிட வேண்டும்.

அம்மனின் உக்கிரமும் அதை தணிக்கும் தேவகனியும்

எலுமிச்சம்பழத்தை தேவகனி என்று அழைப்பார்கள், மற்ற கனிகளை காட்டிலும் மனித எண்ணங்களைஈர்க்கும் சக்தி அதிகம் கொண்டது என்பதால் சூலாயுதத் தில் எலுமிச்சை குத்தப்பட்டிருக்கும், எலு மிச்சை அம்மனுக்கு உரித்தானதாகும்.

அம்மன் கோவில்களில் துர்க்கைக்கு எலுமிச்சம்பழம் மாலை எலுமிச்சம் பழ விளக்கு என போடுவதை பார்த் திருக்கிறோம்.

பொதுவாக அம்மன் உக்ரதேவ தையாக கருதபடுவதால் அம்மனை குளிர்விக்க எலுமிச்சை மாலை அணிவித்து அம்மன் உக்ரம் தணித்து அம்மனின் அருளை பெற முடியும். இயல்பாகவே தெய்வ சக்திகளையும், மந்திரங் களை தக்க வைத்துக் கொள் ளும் தன் மையையும் பெற்றது.

எலுமிச்சைக்கு ஒருவர லாற்று புராணம் உள்ளது. இது வேத காலத்திலிருந்துதொடங்குகிறது. முன்னொரு காலத்தில் நிம்பாசுரா என்று அழைக்கப்படும் ஒரு சக்திவாய்ந்த அசுரன் பஞ் சத்தை ஏற்படுத்தி மக்களை துன்புறுத்தி வந்தான். இதனால் உலகம் பேரழிவை சந்திக்க வேண்டியிருந்தது. வலிமைமிக்க இந்த அசுரன், சிவபெருமான் மற்றும் பிரம்மாவிடம் வரம் பெற்றதால் மிகவும் சக்திவாய்ந்தவராக மாறினார்.

அசுரனின் கொடூரமான செயல்களில் இருந்து மக்களை காப்பாற்ற நினைத்த அகஸ்திய ரிஷி, அசுரனால் ஏற்பட்ட அழிவிலிருந்து பூமியைக் காப்பாற்றுவதற்காக நன்கு வழிபாடுகள் செய்து தவம் மேற்கொண்டு முனிவர் அசுரனின் கொடூரமான ஆட்டத்தை முடிவுக்குக்

கொண்டுவர சக்தி தேவியிடம் பிரார்த்தனை செய்தார்.

முனிவரின் தவத்தால் மனமகிழ்ந்த சக்தி தேவி நிம்பாசுரனை அழித்து பூமியின் மக்களை பஞ்சத்திலிருந்து காப்பாற்றினார் . அதனால் தேவியை சாகம்பரியாக வணங்குகிறார்கள் .

அசுரன் நிம்பாசுரன் இறப்பதற்கு முன்பு, தன் தவறுகளை உணர்ந்து, சாகம்பரி தேவியின் தெய்வீக சக்தியைக் கண்டு, அவளது புனித பாதங்களில் தனக்கு இடம் தருமாறு வேண்டினார். தேவி நிம்பாசுரனுக்கு 'நிம்பு பலா' என்ற பழத்தின் வடிவத்தில் எப்போதும் மக்களால் பூஜிக்கப்படுவார் என்று வரம் அளித்தார்.

சமஸ்க்ருதத்தில் எலுமிச்சை நிம்பு பலா என்று அழைக்கப்படுகிறது. அம்பாளின் அம்சம் நிறைந்து இருப்பதாகவும் நம்ப படுகிறது .அம்பாளின் திருமேனி எப்போதும் வெப்பமாகவும் , அம்பாளின் பார்வை குளிர்ச்சியை கொண்டது .

அம்பாளுக்கு எலுமிச்சம்பழ மாலை அணிவிப்பதன் மூலம் அக்னியான வெப்பம் கொண்ட திருமேனி வெப்பம் குறைவதாக நம்ப படுகிறது . சில கோவில்களில் சூலாயுதத்தின் மேல் எலுமிச்சம் பழம் குத்தி வைப்பார்கள்.

நிறைய பேருக்கு எதற்கெடுத்தாலும் ஒரு பயம் இருக்கும் .. கடன் பயம் மற்றும் கால பயம் நீங்கும் .

வேண்டுதல்கள் நிறைவேற அம்பாளுக்கும் கட்டும் எலுமிச்சை மாலை 9 ...18 ஞ்27ஞ்54 என்று ஒன்பதில் எண்ணிக்கையில் போடும்போது நிச்சய பலன் கிடைக்கும் .".

– செல்லம் சேகர்,
வளசரவாக்கம்.

ஆஞ்சநேயர் வழிபாட்டினால் கிடைக்கும் பலன்கள்

வால்மீகி ராமாயணத்தை படிக்கும் போது, ஆஞ்சநேயருக்காகச் சொல்லும் புகழ்மிக்க ஸ்லோகம் ஒன்றுண்டு.

"புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா!
அஜாட்யம் வாக் படுத்வம் கீச ஹநூமத் ஸ்மரணாத் பவேத்.."

ஆஞ்சநேயர் வழிபாட்டினால் ஒருவருக்கு என்னென்ன பலன் கிடைக்கும் என்பதை இந்த ஸ்லோகம் பட்டியல் இடுகிறது.

நல்ல புத்தி, தேகபலம், புகழ், சாந்தகுணம், யாருக்கும் அஞ்சாத நெஞ்சுறுதி, ஆரோக் கியம், உற்சாகம், வாக்குவன்மை ஆகிய எட்டும் ஆஞ்சநேயரை தியானிப்பதால் உண்டாகும்.

இந்த எட்டையும் எட்டுவதற்கு ஆஞ்சநேயரை வணங்குங்கள்.

அண்ணன் வரும் திருவிழா

மதுரையை ஆளும் மீனாட்சி வைபவம்

மதுரை சித்திரை திருவிழா... மதுரையின் அடையாளமாகவும், உலகப் புகழ்பெற்ற விழாவாகவும் திகழ்வது சித்திரைத் திருவிழா. இதில் முத்திரை பதிக்கும் நிகழ்வான "கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம்" பற்றி விரிவாகக் காண்போம்.

மதுரை மக்கள் "அண்ணன் வரும் திருவிழா" என்று பாசத்துடன் அழைக்கும் இந்த விழா, ஆன்மீகம், கலாச்சாரம் மற்றும் சமூக ஒற்றுமையின் சங்கமமாகும்.

சித்திரை திருவிழாஅட்டவணை வெளியானது! கள்ளழகர் வைகையில்இறங்கும் விழா மே 1–ஆம் தேதி நடைபெறும் ஏப்ரல் 28ஆம் தேதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெறுகிறது

தமிழ்நாட்டின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான மதுரை சித்திரை திருவிழா குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

ஆண்டுதோறும் சித்திரை மாதம் 10 கோலாகலமாக கொண்டாடப்படும் இவ் விழாவில் லட்சக்கணக்கானபக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம்செய்வர். இந்நிலையில் இந்தாண்டுக்கான நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ஏப்ரல் 19ஆம் தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கொடியேற்றமும், ஏப்ரல் 26இல் பட்டாபிஷேகமும் நடைபெறுகிறது. ஏப்ரல் 28 இல் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணமும், 29இல் திருத்தேரோட்டமும் நடைபெறும் என கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. விழாவின் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் மே 1, 2026 அன்று நடைபெற உள்ளது.

பண்டைய காலத்தில், மதுரை மீனாட்சி அம்மன் திருவிழாவும், அழகர் கோயில் திருவிழா வும் வெவ்வேறு மாதங்களில் நடந்தன. மன்னர் திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில், இவ்விரு விழாக்களையும் இணைத்து சித்திரைத் திருவிழாவாக மாற்றினார். இதன் மூலம் சைவமும் (மீனாட்சி)

வைணவமும் (அழகர்) இணைக்கப்பட்டன.

இதன் பின்னணியில் இரு முக்கிய புராணக் கதைகள் உண்டு.

சுதபஸ் என்ற முனிவர், வைகை ஆற்றில் நீராடும்போது துர்வாச முனிவரை கவனிக்கத் தவறியதால், தவளையாக (மண்டூகமாக) மாறும்படி சாபம் பெற்றார். அவருக்கு சாப விமோசனம் அளிக்க அழகர் மலையிலிருந்து இறங்கி மதுரைக்கு வருகிறார்.

தனது தங்கை மீனாட்சியின் திருமணத்தைக் காண அழகர் வருகிறார். ஆனால், அவர் வருவதற்குள் திருமணம் முடிந்துவிட, கோபமடைந்த அழகர் ஆற்றில் இறங்கித் திரும்பிச் செல்வதாக ஒரு கதையும் மக்களிடையே உண்டு.

சித்திரை மாதம் வளர்பிறையில், அழகர் கோவிலில் இருந்து சுந்தரராஜப் பெருமாள் 'கள்ளழகர்' கோலத்தில் மதுரைக்குப் புறப்படுவார். பச்சை பட்டுடுத்தி, கையில் தடியுடன், தங்கப் பல்லக்கில் அவர் வரும் அழகைக் காண லட்சக்கணக்கான மக்கள் திரள்வார்கள்.

வழியில் உள்ள ஒவ்வொரு 'மண்டகப்படியிலும்' அழகர் தங்கி அருள்பாலிப்பார். மதுரைஎல்லையான புதூர் முதல் தல்லாகுளம் வரை வழிநெடுகிலும் பக்தர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிப்பார்கள்.

அழகர் மதுரைக்கு வரும்போது எந்த நிறத்தில் பட்டு உடுத்தி வருகிறார் என்பது மிகப்பெரிய எதிர்பார்ப்பாக இருக்கும்.

பச்சை பட்டு: நாடு செழிப்பாக இருக்கும் (விவசாயம் சிறக்கும்).

சிவப்பு பட்டு: போர்கள் அல்லது கவலைகள் ஏற்படலாம்.

வெள்ளை பட்டு: அமைதி நிலவும்.

மஞ்சள் பட்டு: மங்களகர நிகழ்வுகள் நடக்கும்.

விழாவின் உச்சகட்டநிகழ்வு இது தான். சித்திரா பௌர்ணமிக்கு அடுத்த நாள் அதிகாலை,கள்ளழகர் தனது தங்கக் குதிரைவாகனத்தில் ஏறி வைகைஆற்றில் இறங்குவார். வைகை ஆற்றின் இரு புறமும், பாலங்களிலும் கடல் அலை போல மக்கள்திரண்டிருப்பார்கள். ஆற்றில் இறங்கும் அழகரை, மதுரை வீரராகவப் பெருமாள் வரவேற்று அழைத்துச் செல்வார்.

அழகர் வரும் வழியில் பக்தர்கள் தோல் பைகளில் தண்ணீர் நிரப்பி, அவர் மீது பீய்ச்சி அடிப்பார்கள். இது கோடை வெப்பத்தைத் தணிக்கவும், இறைவனை குளிர்விக்கவும் செய்யப்படும் ஒரு நேர்த்திக்கடனாகும்.

ஆற்றில் இறங்கிய பின், அழகர் அங்கிருந்து கருப்பண்ணசாமி கோயில் வழியாக வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலுக்குச் செல்வார். அங்குதான் மண்டூக மகரிஷிக்கு சாப விமோசனம் அளிக்கும் நிகழ்வு நடைபெறும். பின்னர் அன்று இரவு தசாவதாரக் கோலங்களில் காட்சி அளித்து, மீண்டும் அழகர்மலைக்குத் திரும்புவார்.

– மாலதி சந்திரசேகரன்

இராசிகளுக்கு சந்திராஷ்டமம் அளிக்கும் பலன்கள்

சந்திராஷ்டமம் என்பது ஜோதிடத்தில் மிகவும் முக்கியமான ஒரு காலம். இது, ஒருவர் பிறந்த ராசிக்கு எட்டாம் இடத்தில் சந்திரன் இருப்பதைக் குறிக்கும். சந்திரன் ஒவ்வொரு ராசியிலும் சுமார் இரண்டரை நாட்கள் தங்கி அடுத்த ராசிக்கு செல்கிறான். அந்த இரண்டரை நாட்கள் ஒரு மனிதரின் ராசிக்கு எட்டாம் ராசியில் சந்திரன் இருந்தால் அந்த நாள்கள் சந்திராஷ்டம நாட்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இது பொதுவாக தோஷமான நாள் என்றுகருதப் படுகிறது. அதாவது, முக்கியமான காரியங்களைத் தொடங்குவதற்கு, புதிய முயற்சிகளை ஆரம்பிப் பதற்கு, சுப நிகழ்வுகளை நடத்துவதற்கு பொருத்த மற்ற நாளாகக் கருதப்படுகிறது.

அஷ்டமம் – எட்டு என்ற அர்த்தம்

“அஷ்டமம்” என்ற சொல் எட்டு என்றஎண் ணை குறிப்பதாகும். ஒருவர் பிறந்த ராசியில்இருந்து எட்டாம் ராசியில் சந்திரன் சஞ்சரிக்கும் போது, அதுவே சந்திராஷ்டமம் எனப்படும். சந்திரன் ஒவ் வொரு ராசியிலும் சுமார் 2.5 நாட்கள் தங்குவதால், ஒவ்வொரு மாதமும் இது வருவது இயல்பானது.

உதாரணமாக, ஒருவர் மேஷ ராசியில் பிறந் திருக்கிறார் எனில், அவருக்கான எட்டாம் ராசி விருச்சிகம்.

சந்திரன் விருச்சிக ராசியில் இருக்கும் நாள்கள் அந்த மனிதருக்கு சந்திராஷ்டம நாட்க ளாகக் கருதப்படும்.

ஒவ்வொருவரும் சந்திராஷ்டம நாட்களை நினைத்து மிகவும் பயப்படுகின்றனர். அப்படிப்பட்ட சந்திராஷ்டம் நாட்களில் அதிக மன உளைச்சல், பிரச்சனைகள் ஏற்படுகிறது. ஆனால் சந்திராஷ்டம் நாட்களில் சில நன்மைகளையும் கொடுக்கிறது. சந்திராஷ்டம நாள் எந்த இராசிக்கு எப்படி அமையும் என்று பார்ப்போம்.

மேஷம்

சந்திரன் எட்டில் நீச்சம் பெற்ற நிலையில் இருந் தால், மறைமுக எதிரிகள் வலுவிழந்து போவார்கள். கடன்காரர்களின் தொல்லை இருக்காது. கூட்டாக செய்து வரும் தொழில்களில் லாபம் காணலாம். லாபம்தரும் தொலைதூர பிரயாணங்கள் செய்ய நேரிடும்.

ரிஷபம்

பிள்ளைகளின் வாழ்வில் முன்னேற்ற வாய்ப் புகள் உருவாகும். வாழ்க்கைத்துணையின் பெய ரில் சொத்துகள் சேரும். தொழில் முறையில் கடுமையான அலைச்சல்கள் இருந்தாலும் அதற் கான லாபம் நிச்சயம் கிடைக்கும்.

மிதுனம்

பொதுவாக அதிக சிரமத்தினை சந்தித்தாலும், அடுத்தவர்களுக்கு உதவி செய்து புகழ் பெறுவர். கடும் பொருளிழப்பினை சந்தித்தாலும், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தானம் செய்ய நேரிடும் என்பதால் மற்றவர்களிடையே மிகுந்த நற்பெயர் கிடைக்கும்.

கடகம்

வாழ்க்கைத்துணையின் பெயரில் சொத்துகள்

சேரும். சொந்த பணிகளை விட வாழ்க்கைத் துணையின் செயல்களுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டியிருக்கும். எதிரிகள் வலுவிழப்பார்கள். பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் நீங்கும்.

சிம்மம்

சந்திராஷ்டமத்தால் உண்டாகும் மன உளைச் சலைத் தவிர மற்றபடி அதிக நன்மையைக் காண் பர். 12ம் இடத்திற்குடையவனான சந்திரன் எட்டாம் இடத்தில் அமர்வதால் அநாவசிய விரயங்கள், பொருளிழப்பும் தவிர்க்கப்படும்.

கன்னி

லாப, நஷ்டத்தினை சந்திக்க நேர்ந்தாலும்வீட்டிற் குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பிள்ளை களால் பெருமை கொள்ளத்தக்க சம்பவங்கள் நிகழும். போட்டியாளர்களின் தொல்லைகள் குறை யும்.

துலாம்

துலாம் இராசியை பொறுத்தவரை சந்திராஷ்டமம் நாட்களில் சந்திரன் உச்சம் பெற்று இருப்பார். அன்றைய தினம் உண்டாகும் மன உளைச்சலைத் தவிர மற்ற வகையில் மிகுந்த நன்மை காண்பர். வாகனங்கள் மற்றும் பிரயாணங்களில் ஆதாயம் உண்டாகும்.

விருச்சிகம்

வீண் பழிகளை சுமக்க நேரிடுவதால் உண் டாகும் மன உளைச்சலைத் தவிர்த்து நோக்கினால் போட்டியாளர்கள் வகுக்கும் திட்டங்களைப் புரிந்து கொள்வர். அன்றைய தினத்தில் செயல்பட முடியாது போனாலும் வெற்றிக்கான வழிகளை அறிந்து கொள்ள முடியும்.

தனுசு

செலவுகள் அதிகரிப்பதால் மன உளைச்சல் உண்டாகுமே தவிர வேறு பாதிப்புகள் ஏதும் நேராது. கூட்டுத் தொழிலில் நல்ல தன லாபம் உண்டாகும். வாழ்க்கைத் துணையின் பெயரில் சொத்துகள் சேரும்.

மகரம்

வாழ்க்கைத் துணையின் பெயரில் இருக்கும் சேமிப்புகள் உயரும். பூர்விக சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் விலகும். கூட்டுத் தொழிலில் நன்மை தரும். எதிரிகளால் உண்டாகும் போட்டியினை சமாளித்து வெற்றி காணும் திறன் உண்டாகும்.

கும்பம்

சந்திராஷ்டமத்தால் அதிக நன்மை அடைபவர்கள் இவர்களே. ஆறாம் இடத்திற்குரியவர்எட்டில் அமர்வதால் ஆறாம் இடம்வலுவிழப் பார்கள். வழக்குகள் சாதக மான முடிவைத்தரும்.கடன்சுமைகுறையும். நோய்களின்தாக்கம்குறையும்.

மீனம்

பிள்ளைகளின் பெயரில் இருக்கும் சேமிப்புகள் உயரும். கூட்டு முயற்சிகள் வெற் றியைத் தரும். கடன்சுமை குறையும், தொழில் முறையில் இருந்து வந்த சந்தேகங்கள் நீங்கும். சொந்த வீடு வாங்க வாய்ப்புகள் கிடைக்கும்.

வசீகரம் தரும் கிளி முக தேவி "ஸ்ரீ சுக முகி" தரிசனம்!

ஆன்மீகத்தில் விசித்திரங்கள் தொடர்கின்றன! கிளி முகமும், பெண் உடலும் கொண்ட "சுக முகி" யோகினியைப் பற்றித் தெரியுமா?

யார் இந்த சுக முகி?

64 யோகினிகளில் ஒருவரான இவள், அழகின் அடையாளம். நம் வாக்கிற்கு இனிமையையும், எடுத்த காரியங்களில் வசீகரத்தையும்தரும் மகாசக்தி. எதைப் பேசினாலும் அதுஉண்மையாக இருக்கும். சுக முகி தேவி, ஒருவருடைய வாக்கிற்குச் (பேச்சுக்கு) பேராற்றலை வழங்கக்கூடியவள். இவள் அன்னை ராஜமாதங்கியின் (சரஸ்வதி வடிவம்) பெண் சக்தியாகவும், காமதேவனின் தூதுவராகவும் போற்றப்படுகிறாள்.

கிளியின் கூர்மையான புத்தியும், அன்னையின் கருணையும் இணைந்த வடிவம். நம்மிடம்இருக்கும் கலைத்திறனை உலகிற்கு வெளிப்படுத்தி, புகழைப்பெற்றுத் தருபவள்.

இவள் ஒரு கையில்கரும்பும், மறுகையில் மலர்ப் பாணமும்ஏந்தி, பச்சைப் பட்டுடையில் மிகவும் வசீகரமாகக் காட்சியளிப்பாள்.

இவள் நம் மனதில் தோன்றும் நல்லெண்ணங்களைப் பிறருக்கு இனிமையாகஎடுத்துச்சொல்லும் கலைக்கு அதிபதி.

இவளை "வாக்கின் வசீகரம்" என்று அழைப்பார்கள். யோகக் கலையில் "விசுத்திச் சக்கரம்" தூண்டப்படுபவர்களுக்கு இந்த தேவி அஷ்டமா சித்திகளில் ஒன்றான நினைத்ததைச் சாதிக்கும் ஆற்றலை வழங்குவாள் என நம்பப்படுகிறது.

பேச்சாற்றல் வளரவும், கலைத்துறையில் வெற்றி பெறவும், சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் பெருகவும் இவரை வழிபடலாம். முக்கியமாக, திருமணத் தடைகள் நீங்கி மகிழ்ச்சியான வாழ்க்கை அமைய இவள் அருள் புரிவாள்.

ஒரிசாவின் "ஹிராப்பூர்" மற்றும் மத்தியப் பிரதேசத்தின் 64 யோகினி கோவில்களில் இந்த அபூர்வத் தேவியின் திருவுருவத்தைக் காணலாம்.

அழகும் அறிவும் ஒருங்கே கொண்ட இந்த சுக முகி வடிவம் மகா விசித்திரம்!

சுக முகி மூல மந்திரம்:

"ஓம் ஹ்ரீம் சுக முகாயை நம: !!"

– முனைவர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

முருகனின் அற்புத சிறப்புகள்

- கந்தனுக்குரிய விரதங்கள்:
  1. வார விரதம்,
  2. நட்சத்திர விரதம்,
  3. திதி விரதம்.
- முருகனின் மூலமந்திரம்..
  ஓம் சரவணபவாய நம என்பதாகும்.
- மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றோரு பெயர் உள்ளது.
- முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ் சரிப்பவன் என்பது பொருளாகும்.
- முருகனின் கோழிக்கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.
- முருகப் பெருமானுக்கு உகந்த மலர்கள் முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தன் முதலியவை ஆகும்.
- முருகனை ஒரு முறையே வலம் வருதல் வேண்டும்.
- முருகனைப்போன்று கருப்பைப வாசம் செய் யாத வேறு தெய்வம் வீரபத்திரர்.
- பத்துமலை என்ற பெரியமலை மீது முருகன் உள்ளார். இந்த கோயில் (மலேசியா), கோலா லம்பூரில் இருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது. தைப்பூசம் இங்கு விசேஷம்.
- முருகனுக்கு உருவமில்லாத கோவில் விருத்தா சலத்தில் உள்ளது. பெயர் கொளஞ்சியப்பர். அருவுருவ நிலைப் பிரார்த்தனை தலம் என்று இதனைக் கூறுவார்கள்.
- கந்தர் சஷ்டி கவசத்தை எழுதியவர் தேவராயன் ஆவார். முருக வழிபாடு என்பது ஷண்மதம் என்று சொல்லப்படுகின்றது.
- கோபுரத்து இளையனார் என்கிற முருகன் சந்நிதி திருவண்ணாமலையில் உள்ளது.
- முருகன் வீற்றிருக்கும் மிகநீண்ட மலை திருத் தணி பள்ளிப்பட்டு ரோட்டில் அமைந்துள்ள நெடியமலை ஆகும்.

சீடனின் குருதட்சிணையும்

குருபக்தியும்!!

ஆசார்யார் வேதன், ஒருநாள் அதிகாலை ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டார். அருகேயுள்ள தேசத்து அரசன், அவரை யாகம் நிகழ்த்த அழைத்திருந்தான்.

பொதுவாக அவர் ஆசிரமத்தை விட்டு எங்கும் வெளியே செல்வதில்லை. கோயில் குளங்களைத் தேடிக்கூடப் போனதில்லை. இருக்கும் இடத்திலேயே தியானம் செய்து இறைவனை மனத்திற்குள் காண முடிகிறபோது, எதற்கு வெளியே செல்ல வேண்டும் என்பது அவரது சித்தாந்தம்.என்றாலும் யாகத்தை முன்னிருத்தி மன்னனின் அழைப்பைத் தட்ட முடியவில்லை. தம் சீடன் உத்தங்கனை அழைத்தார். தாம் திரும்பி வரும்வரை, குரு பத்தினியையும் பிற சிஷ்யர்களையும் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது பிர தான சீடனான அவன் பொறுப்பு என்பதை அறிவுறுத்தினார். பின் புறப்பட்டார்!!!

குருநாதர் திரும்பி வரும்வரை அக்கறையாக ஆசிரமத்தையும் குருபத்தினியையும் பிற சீடர்களையும் கவனித்துக் கொண்டான். ஆசிரமத்துக் கொட்டிலில் கட்டியிருந்த பசுமாடுகளுக்குத் தீவனம் போடுவதிலிருந்து ஆசிரமத் தைப் பெருக்கித் தூய்மை செய்வதுவரை அவன் செய்த பணிகள் பலப்பல.

ஆசார்யர் திரும்பி வந்ததும் குரு பத்தினி, உத்தங்கனின் செயல்பாடுகளை மனநிறைவுடன் பாராட்டினாள். ஆசார்யார் மனம் மகிழ்ந்தார், ‘‘உத்தங்கா! நீ எல்லா நலங்களும் பெற்று வாழ்வாய். உன் குருகுலவாசம் நிறை வடைந்தது. கற்க வேண் டிய அ னை த் தை யு ம் கற்றுவிட்டாய்.

ஓர்



ஆசிரமத்தைத் தனியே நிர்வகிக்கும் பொறுப்பு ணர்வும் உனக்கு வந்து விட்டது. இனி நீ செல்லலாம்!'' என உத்தங்கனுக்கு விடை கொடுத் தார்.தயங்கியவாறே நின்றான் உத்தங்கன். ''சுவாமி. தங்களுக்கு ஏதேனும் குருதட்சிணை கொடுக்க விரும்புகிறேன். தாங்கள் எது கேட்டாலும் தரச் சித்தமாய் இருக்கிறேன்'' என்றான்!!!

''எனக்கு எதுவும் தேவையில்லை, குழந்தாய். நான் இல்லாத காலத்தில் ஆசிரமத்தைச் சிறப்பாக நீ கவனித்துக் கொண்டதே எனக்களிக்கப்பட்ட குருதட்சிணைதான்!'' ''குருதட்சிணை கொடுத் தாலன்றி, கற்ற கல்வி ஒரு மாணவனுக்குப் பயன்படாது என்பது சாத்திரம். தாங்கள் விரும்பும் குருதட்சிணை எதுவென்று சொன்னால் மகிழ் வேன்.'' குரு யோசித்தார். பின் சொன்னார்: ''நல்லது. எனக்கு எதுவும் தேவையில்லை. என் மனைவிக்கு ஏதாவது தேவையா என்று கேள். அதைக் கொடுத்து, உன் மனமும் தட்சிணை தந்த வகையில் திருப்தி அடையட்டும்!''என்றார்

உத்தங்கன் குருபத்தினியிடம் தட்சிணையாக என்ன வேண்டும் எனக் கேட்டான். அவள் சற்று யோசித்துப் பின் சொன்னாள்: ''பௌஷ்ய மன்னனின் மனைவியிடம் விசேஷமானஇரண்டு குண்டலங்கள் இருக்கிறதாம். அவை கற்புக்கரசி யான அவள் செவிகளில் ஒளிவீசிய வாறே ஆடு கின்றன என்கிறார்கள். அவற் றை எனக்காகக் கேட்டு வாங்கி வா! ஆனால் ஒன்று. நான்கு நாட் களில் குண்டலங்களோடு வர வேண்டும் நீ!'' என்றாள். மனைவி சொல்வதைக் கேட்ட குரு, தானும் சீடனைச் சோதிக்க விரும்பி னார்.

''உத்தங்கா! என் மனைவி என்ன தட்சி ணை என்பதைச் சொல்லிவிட்டாள். நான்கு நாட்களுக்குள் குண்டலங்களோடு நீ வர வில்லையென்றால், சொன்ன சொல் தவறிய உனக்கு நீ கற்ற கல்வி பயன்படாமல் போகலாம். நாலே நாட்களில் வந்துவிடுவாய் அல்லவா?'' ''நிச்சயமாக வருவேன் குருவே. உங்கள் ஆசியால் என்னால் அதை சாதிக்க முடியும்!''விடைபெற்று, பௌஷ்ய மன்னனைத் தேடிப் புறப்பட்டான் உத்தங்கன். வானிலிருந்து இந்த உரையாடலைக் கேட்ட தேவேந்திரன், உத்தமமான சீடனான உத்தங்கனுக்கு உதவ முடிவு செய்தான்!!!

உத்தங்கன் சென்ற வழியில் கம்பீரமான ஒரு மாட்டின் மீது ஒரு பெரிய மனிதர் அமர்ந்து சென்று கொண்டிருந்தார்.

ஒளிவீசும் முகம். அவரைப் பார்த்தாலே அவர் சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று தோன்றியது. அவர் உத்தங்கனிடம், மாட்டின் சாணம், சிறுநீர் ஆகியவற்றைக் கலந்து சிறிது அருந்திச் செல்லுமாறு பாசத்தோடு கூறினார். நெடுந்தூரம் செல்லும் அவனுக்கு அது உடல்வலு கொடுக்கவல்லது என்றார். தான் நெடுந்தூரம் செல்வது அவருக்கு எப்படித் தெரியும் எனக் கேட்க நினைத்தான் உத்தங்கன். ஆனால் கேட்கவில்லை. அவர் சொன்னபடியே மாட்டின் சாணத்தையும் சிறுநீரையும் சிறிதளவு கலந்து உட்கொண்டான். ஆசிரமத்தில் மாட்டின் பொருட் களால் செய்யப்படும் பஞ்சகவ்யத்தை அவன்தான் அருந்தியிருக்கிறானே! கண்மூடித் தியானம் செய்தபடி அதை சாப்பிட்டுவிட்டு, விழி திறந்தவன், மாட்டையோ அதன் மேல் அமர்ந்துவந்த மனித ரையோ காணாமல் திகைத்தான்.

அவர் போயிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான். தானும் வேகமாகச் சென்று பௌஷ்ய மன்னனை அடைந்தான்.

குருதட்சிணைக்கு ராணியின் குண்டலங்கள் தேவை என்று மன்னனிடம் சொன்னதும், ராணியையே அந்தப்புரத்தில் போய்ப் பார்த் துக் கேட்கச் சொன்னார் அரசர். என்ன சங்கடம்! அந்தப்புரமெங்கும் தேடித் தேடிப் பார்த்தும் அவனால் ராணியைக் காண இயல வில்லை. அரசரிடம் வந்து சொன்னதும் அரசர் நகைத்தார்!!!

ராணி மகாபதிவிரதை என்றும் குளித்துத் தூய்மையாகச் சென்றால்தான் அவள் தரிசனம் கிட்டும் என்றும் சொன்னார். அதன்படி உத்தங்கன் நீராடி, அந்தப்புரம் சென்றபோது, தாய்மைக்கே உரிய கனிவோடு அவனை வரவேற்றாள் அரசி

அவன் சொன்னதனைத்தையும் கேட்ட அவள், ''குழந்தாய், உத்தங்கா! குண்டலங்கள் விசேஷ மானவைதான்.

ஆனால் அவை வெறும் அலங்காரம்தானே அன்றி அவற்றால் என்ன பயன்? தர்மத்தை அனுசரிப்பதால் வரும் சாந்தியை இந்த வெற்று அலங்காரப் பொருள் எங்கே தரப் போகிறது? உணவால் நா தித்திக்கிறது.

ஆனால் குண்டலங்களை அணிவதால் காது தித்திக்கிறதா என்ன? காதுக்கு என்ன சுகம் கிடைக்கிறது? எனக்குக் குண்டலங்கள் மேல் அக்கறை எதுவும் இல்லை! உனக்கு அவை குருதட்சிணையாகப் பயன்பட்டால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி வேறில்லை!'' என்று சொன்ன ராணி, அவற்றைக் கழற்றி உத்தங்கனின் கை

களில் வைத்தாள்.

குண்டலங்களின் ஸ்பரிசம் பட்டதும்உத்தங்கனின் உள்ளங்கை குளுமை பெற்றது. குண்டலங்களின் ஒளியால் அந்தப் பிரதேசமே வெளிச்சமடைவதைப் பார்த்து உத்தங்கனிடம் வியப்பு ஏற்பட்டது. ராணி செய்த உபகாரத்திற்குநன்றி தெரிவித்து அவன் விடைபெற்றபோது, இந்தக் குண்டலங்களின் மேல் பலருக்குக் கண்இருக்கிறது என்றும் அவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மிக அவசியம் என்றும் அறிவுறுத்தினாள் ராணி. அவன் ஆசிரமம் நோக்கி நடக்கத் தொடங்கியபோது, தன்னை மனித உருவில் தட்சகன் என்கிற நாகம் தொடர்வதை அவன் கவனிக்கவில்லை!!!

குண்டலங்களை ஒரு மரத்தடியில் வைத்து விட்டு, குளத்தில் முகம் கழுவி இறைவனைப் பிரார்த்தித்து, பின் மீண்டும் தன் பயணத்தைத் தொடர எண்ணி மரத்தடிக்கு வந்தான். என்ன ஆச்சரியம்! குண்டலங்களைக் காணோம்.

பதறிப்போய்ச் சுற்றுமுற்றும் பார்த்த போது ஒருவன் கையை மூடிக்கொண்டு ஓடுவதும் அவன் கைவிரலின் இடுக்குகளிலிருந்து ஒளி கசிவதும் உத்தங்கனின் கண் களில் பட்டன. சந்தேகமில்லாமல் அவன்தான் குண்டலங்களைத் திருடியிருக்கிறான்.

வேகமாக ஓடினான் உத்தங்கன். ஆனால், அவனோ நாகமாக மாறி குண்டலங்களுடன் குளக்கரையில் இருந்த ஒரு பொந்தில் நுழைந்து பாதாள உலகத்திற்குச் சென்றுவிட்டான்.

இனி என்ன செய்வது? உத்தங்கன் திகைத்தவாறு ஒரு குச்சியை எடுத்து அந்தப் பாம்பு சென்ற பள்ளத்தைத் தோண்டிப் பார்க்கலானான். மறுகணம் அவனருகே தொப்பென்று ஏதோ வந்து விழும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் அது ஓர் ஆயுதம்.அந்த ஆயுதத்தால் பள்ளத்தைத் தோண்டலானான். கிடுகிடுவென்று பள்ளம் பெரிய சுரங்கப் பாதையாக உருவாகிக் கீழ்நோக்கிச் சென்றது. அதில் வேகமாக ஓடினான். பாதை அவனை மிக விரைவில் நாக உலகத்திற்குக் கொண்டு விட்டது. அங்கே கறுப்பு, வெள்ளை நூல்களால் இரண்டு பெண்கள் ஆடை நெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் யார் என்று தெரியவில்லை. ஒரு கணம் கூட நிறுத்தாமல் அவர்கள் கறுப்பு நூலாலும் வெள்ளை நூலாலும் மாற்றி மாற்றி நெய்துகொண்டே இருந்தார்கள்!!!

அவர்கள் அருகே பன்னிரண்டு ஆரம் கொண்ட ஒரு பெரிய சக்கரம் இருந்தது. அது நிற்காமல் சுழன்றுகொண்டே இருந்தது. இவர்கள் நெய்வதற்கும் அந்தச் சக்கரங்கள் சுழல்வதற்கும் இடையே ஏதோ ஒரு தொடர்பிருந்தது போல் தோன்றியது உத்தங்கனுக்கு.

அவர்கள் அருகே ஒரு குதிரையும் ஒரு மனிதனும் தென்பட்டார்கள். அந்த மனிதனிடம் எனக்குக் குண்டலங்கள் வேண்டும் என்று கேட்டான் அவன். ‘‘அவற்றை நாகராஜன் கவர்ந்து கொண்டு இந்தப்புறம் ஓடியதைப் பார்த்தேன்.

உனக்குக் குண்டலங்கள் கிடைக்க ஒரே வழி, இந்தக் குதிரையின் பின்புறத்தை ஓங்கி உதைப்பதுதான்!’’ என் றான் அவன்! குதிரையின் பின்புறத்திற்கும் பெண்கள் காதில் அணியும் குண்டலத் திற்கும் என்ன சம்பந்தம் என்று உத்தங்கனுக்குப் புரியவில்லை. ஆனாலும் அவன் சொன் னபடி, வலிமையை எல்லாம் திரட்டி, குதிரையின் பின் புறத்தில் ஓங்கி ஓர் உதைவிட்டான்.

அடுத்த கணம் குதிரையின் மயிர்க் கால்களிலிருந்து பெரும் புகையும் நெருப்பும் எழுந்து நாக உலகம் முழுவதையும் சூழ்ந்துகொண்டது. இதைக் கண்டு அதிர்ச்சியும் அச்சமும் அடைந்த தட்சகன் என்ற நாகம் உயிர்பிழைத்தால் போதும் என்று குண்டலங்களை உத்தங்கனிடம் திருப்பிக் கொடுத்து மன்னிப்பு வேண்டியது.

குண்டலங்கள் கைக்கு வந்தும்கூட உத்தங்கன் கடும் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தான்.அவன் ஏன் வருந்துகிறான் என்று அன்போடு கேட்டான் குதிரையின்அருகே இருந்த மனிதன். ஆசார்யர் வைத்த கெடுவில் இன்னும் ஐந்தே

நிமிடங்கள்தான் மீதமிருக்கிறது என்றும் அதற்குள் தான் ஆசிரமம் செல்ல இயலாதென்பதால் வருந்துவதாகவும் சொன்னான் உத்தங்கன்!!!

''இது சாதாரணக் குதிரை அல்ல.காலக் குதிரை. இதில் ஏறி இதன் கழுத்தைப் பிடித்து அமர்ந்துகொள். செல்ல வேண்டிய இடத்தை மனத்தால் நினைத்துக் கொள். மறுகணம் குதிரை உன்னை அங்கே கொண்டுவிடும்!'' என்றான் அந்த மனிதன். அப்படியும் நடக்குமா? ஆச்சரியத்தோடு உத்தங்கன் குண்டலங்களைக் கைகளில் வைத்து மூடிக்கொண்டு குதிரை மேல் தாவி ஏறித் தான் கல்வி கற்ற ஆசிரமத்தை நினைத்துக் கொண்டான்.

மறுகணம் குதிரை ஆசிரம வாயிலில் இருந் தது! அவனை அங்கே இறக்கிவிட்ட அது ஒரே பாய்ச்சலாகத் தான் வந்த இடத்திற்குத் திரும்பி விட்டது! குருதேவரும் அவர் மனைவியும் காலக் கெடுநெருங் குவதால், அவன் உரிய நேரத்தில் வந்து சேர வேண்டுமே எனக் கவலையோடு காத்திருந்தார்கள்!!!



அவர்களை வணங்கிய உத்தங்கன் குண்ட லங்களை குருபத்தினியின் கரங்களில் சமர்ப் பித்தான். ஆசார்யர் அவனைப் பிரியத்தோடு வாழ்த்தினார்.

''கடவுள் அருளாலும் உங்கள் ஆசியாலும் பல இடையூறுகளைக் கடந்து குண்டலங்களைஉரிய நேரத்திற்குள் கொண்டுவந்து விட்டேன்.ஆனால் வழியில் நடந்தவை எல்லாம் மர்மமாக இருக் கின்றன!'' என்று நடந்த அனைத்தையும் சொல்லி குருநாதரிடம் விளக்கம் கேட்டான் உத்தங்கன். அவர் சிரித்தவாறே விளக்கம் சொன்னார்.

''குழந்தாய்! மாட்டின் மீது வந்த பெரியவர் இந்திரன். அவர் உனக்குத் தந்தது அமிர்தம். உன் குருபக்தியை மெச்சித் தரப்பட்ட பரிசு அது. அதை அருந்தியிராவிட்டால் நாக உலகத்தின் கடும் விஷத்திலிருந்து நீ எப்படித் தப்பித்திருக்க முடியும்? நாக உலகத்தை அடைவதற்குப் பள்ளம் தோண்டினாயே?

அப்போது உன் அருகே வந்து விழுந்த ஆயுதம் இந்திரனின் வஜ்ராயுதம்.

அதனால்தான் ஒரு சிறிய பொந்தை உடனடி யாக ஒரு சுரங்கப் பாதையாக உன்னால் தோண்ட முடிந்தது. கீழ் உலகில் கறுப்பு வெள்ளைநூல்களால் ஆடை நெய்த இளம்பெண்கள் இருவரைக் கண்டாய் அல்லவா? அவர்கள் கடவுளின் பணிப்பெண்கள். இடைவிடாமல் வெள்ளை நூலால் பகலையும் கறுப்பு நூலால் இரவையும் தொடர்ந்து நெய்துகொண்டே இருக்கிறார்கள்.அவர்களால்தான் இரவும் பகலும் மாறி மாறி வருகின்றன. அவர்களின் அருகே பன்னிரண்டு ஆரங்களோடு சுற்றிக் கொண்டிருந்த சக்கரம்தான் காலச் சக்கரம். அந்த ஆரங்கள் பன்னிரண்டு மாதங்களைக் குறிப்பவை.

அங்கே அமர்ந்திருந்த மனிதன் காலதேவன். குதிரை, சக்தியின் குறியீடு. சக்தியோடு வேலை செய்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏராளமான வேலை செய்து ஜெயிக்க வேண்டியதை யாரும் ஜெயி க்கலாம். இதோ நீ ஜெயித்ததைப் போல.'' குருதேவரும் குருபத்தினியும் அவன் தலைமீது கைவைத்து ஆசீர்வதித்தார்கள். வானுலகிலிருந்து உத்தங்கன் மேல் மலர்மாரி பொழிந்தது.

(குருபக்தியின் மகிமையை விளக்கும் இக்கதை மகாபாரதத்தில் ஆதி பர்வத்தில் சொல்லப்பட்டுள்ளது.)

ஓம் சாந்தி மந்திரத்தின் மகிமை



சாந்தி என்றால் அமைதி எனவும் பொருள்படும். மந்திரங்கள் உச்சாடனம் செய்து முடிக்கும் போது இறுதியாக "ஓம் சாந்தி:, சாந்தி:, சாந்தி:" என்று முடிப்பார்கள்.

இதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கின்றது. நம்முடைய நூல்களைப் புரட்டிப் பார்த்தால் அதற்கான அரிய தத்துவம் நமக்கு புரியும்.

ஒரு மனிதன் அவன் வாழ்க்கையில் மூன்று விதமான துன்பங்களில் இருந்து நீங்க வேண்டும். இதைப் பற்றி சாங்கிய யோக சூத்திரம்முதல் வரியில் கூறுகின்றது. அந்த மூவகை துன்பங்கள்:

1. அதிதைவீகம்
(நம் சக்திக்கு மீறிய ஒன்றால் ஏற்படுவது)

2. அதிபௌதீகம்
(பௌதீக பொருட்களால் ஏற்படுவது)

3. அதியாத்மிகம்
(நம்மால் ஏற்படுவது)

அதிதைவீகம்:

அதிதைவீகம் என்பது நம்மால் கட்டுப்படுத்த முடியாத, நம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றால் வரும் துன்பமாகும். நம் சக்திக்கு மீறிய ஒன்று தான் இயற்கை.

வெள்ளம், புயல், நிலநடுக்கம், ஆழிப்பேரலை, எரிமலை வெடிப்பு போன்றவை இயற்கையிடமிருந்து வரும் துன்பங்கள் ஆகும்.

இந்த துன்பங்களை தடுத்து நிறுத்தும் சக்தி சாமானிய மனிதர்களுக்குக் கிடையாது.

அதிபௌதீகம்:

அதிபௌதீகம் என்பது உலகத்தில் இருக்கும் ஜடப்பொருட்கள், உயிரினங்கள் போன்றவற்றிலிருந்து வரும் துன்பங்கள் ஆகும்.

இவற்றுள் மனிதன், மிருகம், தாவரம், உயிரற்றப் பொருள் ஆகியவை அடங்கும்.

உதாரணமாக: ஒருவர் நம்மை வாய்ச்சொல்லால்

துன்பப்படுத்துதல், ஆயுதத்தால் தாக்குதல், கையால் தாக்குதல்.

பாம்பு கடி, தேள்கடி, டிங்கு, மலேரியா, வனவிலங்கு தாக்குதல், விஷசெடி தீண்டல், கட்டி டங்கள் சரிந்து விழுதல், மின்சாரம் தாக்குதல், சாலை விபத்து போன்றவை.

அதியாத்மிகம்:

அதியாத்மிகம் என்பது நமக்கு நாமே ஏற் படுத்திக் கொள்ளும் துன்பமாகும். இதுவே மிகவும் ஆபத்தானது என சொல்லப்படுகின்றது.

இந்த வகையான துன்பத்திற்கு நாம் தான் முழு பொறுப்பு. நம்மை நாமே துன்புறுத்திக் கொள்வதை இரண்டு வகையாகப் பகுக்கலாம்.

உடலால் – புகைப்பிடித்தல், மது அருந்துதல், ஆரோக்கியமற்ற உணவு உண்ணுதல் போன்ற செயல்களால் நம் உடலை நாமே துன்புறுத்திக் கொள்ளுதல்

மனத்தால் – தேவையற்ற எண்ணங்களைக் கொண்டிருத்தல், முறையற்ற விஷயங்களை நினைத்துக் கொண்டிருத்தல், கோபம்,வெறுப்பு, பொறாமை போன்ற தீயகுணங்களைக் கொண் டிருத்தல்

இதற்கான தீர்வு:

பதஞ்சலி யோக சூத்திரத்தில் துன்பங்களைப் பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றியும் தெளிவாக விளக்குகின்றார்.

துன்பங்கள் என்பவை கிலேஷங்கள் என்று சொல்லப்படுகின்றன. நம்முடைய சுய இயல்பைப் பற்றி நாம் அறியாமல், அறியாமையில் திளைத்திருப்பதால் தான் புத்திமலுங்கி நம்மை நாமே துன்பப்படுத்திக் கொள்கிறோம் என பதஞ் சலி கூறுகின்றார்.

எனினும் எதிர்காலத்தின் துன்பங்களைத் தடுக்கும் அளவுக்கு நமக்கு ஆற்றல் உள்ளது என்பதை “ஹேயம் துக்ஹம் அனாகதம்” (2:16) இல் குறிப்பிடுகின்றார்.

இந்த மூன்று நிலையிலுமான துன்பங்கள் நீங்கி எங்கும் அமைதி நிலவிடவே, ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என மூன்று முறை செப்பிக்கப்படுகின்றது.

அமைதியான இடத்தில், தூய்மையான பக்தி கொண்ட உள்ளத்தோடு அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டு ஓம் சாந்தி என செப்பித்து வந்தால் ஒரு மனிதன் இந்த மூன்று வகையான துன்பங்களில் இருந்தும் நீங்கிடலாம்.

அருள்தரும் தெய்வம்
எப்பொழும் நம் இல்லங்களில்..

EDITOR & PUBLISHER
R.S.ROSHINE

SUB-EDITORS
Rajan, Mahalakshmi, Mohan Kumar, Rakesh, Tina

EDITORIAL BOARD
Kavi Vennilavan, Balachandar
Nellai Kuralon, Manivannan
Shiva MuthuLakshmanan, Sivakumar
Saravanan, Bhanumathi Nachiyar
Malathi Chandra Sekaran

CIRCULATION
Kannan, Sankara Murthy

DESIGN: SML GRAPHICS Ph:9444228203

PHOTOGRAPHERS: Nagarajan

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
7092894609

www.arultharumdeivam@gmail.com

இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.

ஏழு கோடி மஹா ருத்திரம் ஜபித்தத்தின் பலன் தரும்

சிவபெருமான் ரத்னேஷ்வரின்புகழை பார்வதி தேவிக்கு விவரித்துக் கொண் டிருந்தார். துல்லியமாக அந்த நேரத்தில் மகிஷாசுரனின் மகன் கஜாசுரன் ஆக்ரோஷ மாக பல்வேறு சிவனடியார்களை அடித்துக் கொன்றான். அவன் காலடிகள் தரையைத் தொட்ட இடமெல்லாம் நிலநடுக்கம் போன்ற அதிர்வுகள் ஏற்பட்டன.

அவனது பிரம்மாண்டமான கைகள் அனைத்து மரங்களையும் வேரோடு பிடுங்கி விட்டன. மேலும் அவனது மூச்சுத்திணறல் கடலில் பெரும் அலைகளை ஏற்படுத்தியது. தனியாக இருந்தால், கஜாசுரன் உலகில் அழிவை உருவாக்கியிருப்பான்.

சிவபெருமான் காசி. புண்ய க்ஷேத்திரத்தில் எந்த விதமான இடையூறுகளையும் விரும்ப வில்லை. கஜாசுரன் வேகத்தில் சிவபெருமானை நெருங்கியதும், சிவபெருமான் தன் திரிசூலத்தால் அவனைத் துளைத்து வானில் உயர்த்தினார். இதனால் அந்த அரக்கன் உயிரிழந்தான்.

இறப்பதற்கு முன் கஜாசுரன் சிவபெரு மானிடம், தான் சிவபெருமானின் கைகளால் மரணத்தை எதிர்கொண்டதில் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும். இது உண்மையில் தனக்கு ஒரு விதத்தில் உள்ள பேரின்பம் என்றும் கூறினார். எல்லா உயிர்களும் ஒரு நாள் அல்லது இன்னொரு நாள் இறக்க வேண்டும். அத்தகைய மரணம் அனைவருக்கும் வரமாக இருக்க வேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்தார். அவர் இறந்த பிறகு, அவரது தோல் என்றென்றும் சிவபெருமானை அலங்கரிக்க வேண்டும் என்றும், அவர் (கஜாசுரன்) சிவ பெருமானுடன் தொடர்ந்து தொடர்பு கொண்ட திருப்தியைப் பெற வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

அதற்கு சிவபெருமான் சம்மதித்தார். மேலும், கஜாசுரன் காசி என்ற அவிமுக்த



க்ஷேத்திரத்தில் மரணமடைந்ததாகவும். அவனது உடல் அந்த இடத்தில் துல்லியமாக ஒரு பெரிய சிவலிங்கத்தின் வடிவத்தை அடையும் என்றும் கூறினார். இந்த லிங்கம் கிருத்தி வாசேஸ்வரர் என்று அழைக்கப்படும். கிருத்தி வாசேஸ்வரர் காசியில் உள்ள எந்த சிவலிங்கத்தையும் விட மிகப் பெரிய லிங்கமாக இருப்பார். மனித குலத்தின் நலனுக்காக சிவபெருமான் தானும் தனது குடும்பத்தினரும் எப்போதும் கிருத்தி வாசேஸ்வரர் லிங்கத்தில் இருப்போம் என்று கூறினார். பகவான்.

கிருத்தி வாசேஸ்வரர் லிங்கத்தை பூஜித்தால் ஏழு கோடி மஹா ருத்திரம் ஜபித் தத்தின் பலன் கிடைக்கும்.

பலவித பூஜைகள் மற்றும் நல்ல/புண்ணிய செயல்களைச் செய்வதன் மூலம் முந்தைய

கிருத்தி வாசேஸ்வரர்

பிறவிகளிலும், நிகழ்காலப் பிறவிகளிலும் செய்த பாவங்கள் அனைத்தும் கழுவப் படுகின்றன. ஆனால் கிருத்தி வாசேஸ்வரரை தரிசனம் செய்தாலே பக்தனின் அனைத்து பாவங்களும் நீங்கும்.

பிரம்ம வைவர்த்த புராணத்தின் படி, கிருத்தி வாசேஸ்வரர் காசிவாசிகளின் (தெய்வீக வாழ்க்கை யை ஏற்றுக்கொண்ட காசியில் வசிப்பவர்கள்) வாழ்க்கையை பலனடையச் செய்து இந்த கோவி லில் பிரார்த்தனை செய்யும் பக்தர்களுக்குமோட்சத்தை அளிக்கிறார். கூர்ம புராணத் தின் கூற்றுப்படி, ஒரு பக்தன் ஆயிரம்பிறவி களுக்குப் பிறகும் மோட்சத்தை அடை கிறானோ இல்லையோ, கிருத்தி வாசேஸ் வரரின் ஆசியுடன், பக்தன் நிச்சய மாக மோட்சத்தை அடைந்து முக்தி பெறுகி றான்.

காசி காண்டத்தில் உள்ள மற்ற இடங்களில், பார்வதி தேவி காசியில் வழிபடப்படும் லிங்கங் களைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினாள். அவை முக்தி அளிக்கும் திறன் கொண்டவை. சிவபெரு மான் பார்வதி தேவியிடம் காசியில் கோடிக் கணக்கான லிங்கங்கள் இருப்பதாக கூறி னார் (காசி காண்டம். அத்தியாயம் 73) அவற்றில் பல சுயம்பு லிங்கங்கள் மற்றும் பல வேத சடங்குகளை கடைபிடித்த பிறகு பக்தர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை.

மேற்கூறிய லிங்கங்களில், பதினான்கு முக்கிய லிங்கங்கள் உள்ளன. அத்தகைய லிங்கங்களின் பெயரை உச்சரிப்பதன் மூலம், பக்தன் தனது அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். அத்தகைய லிங்கங்களில் நான்காவது கிருத்தி வாசேஸ்வரர் லிங்கம்.

இடைக்காலத்தில் பல முகலாய ஆட்சியாளர் கள் பல்வேறு கோவில்களை அழித்தார்கள்.

அழிக்கப்பட்ட காசியின் முக்கியமான கோயில் களில் மூன்று முக்கியமானவை, அதாவது விஸ் வேஸ்வரர் கோயில், கிருத்தி வாசேஸ்வரர் கோயில் மற்றும் பிந்து மாதவ் கோயில் (விஷ்ணு). கிருத்தி வாசேஸ்வரர் கோவில், காலபைரவர் கோவிலுக்குவடக்கே அமைந்து, அவுரங்கசிப்பால் அழிக்கப்பட்டது. கோயிலுக்கு அருகில் ஹன்ஸ் தீர்த்தம் இருந்தது. மக்கள் ஹன்ஸ் (அன்னம்)தீர்த்தத் தில் குளிப்பதும், கிருத்தி வாசேஸ்வரர் கோவிலில் பிரார்த்தனை செய்வதும் புனித மாக கருதப்பட்டது.

இக்கோயில் இடிக்கப்பட்ட பின்னர், நீண்ட இடைவெளிக்குப் பிறகு ராஜா பத்னிமலால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற் போதுள்ள கோயில் பழமை வாய்ந்த கோயிலுக்கு தெற்கே உள்ள இடத்தில்கட்டப் பட்டு, தற்போது புதிதாகக் கட்டப்பட்ட கோயி லில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப் பிட வேண்டும். அசல் கிருத்தி வாசேஸ்வரர் ஒரு பெரிய கோவில் வளாகத்தில் இருந்தார். மேற்கூறியபடிகோவிலை இடித்த பிறகு ஒரு மசூதி கட்டப்பட்டது மற்றும் துல்லியமாக கிருத்தி வாசேஸ்வரர் லிங்கம் இருந்த இடத்தில் ஒரு நீரூற்று இருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு வரை, சிவராத்திரி நாட்களில், லிங்கம் ஒருமுறை நின்ற இடத்தில் உள்ள நீரூற்றில் பக்தர்கள் பிரார்த்தனை செய் தனர். சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு, அந்த இடத்தில் மீண்டும் ஒரு பெரிய லிங்கம் நிறுவப் பட்டது. மேற்கண்ட தலத்திலும் பக்தர்கள் எளிய வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

பூர்ணிமாவுக்குப் பிறகு (அமாவா சைக்கு ஒரு நாள் முன்பு) அனைத்து சதுர்த்தசி நாட்களும் சிறப்பு முக்கியத் துவம் வாய்ந்தது. மேற்கூறிய நாளில் விரதம் அனுஷ்டித்து, கிருத்திவாசேஸ் வரர் கோவிலில் பூஜை செய்பவர் மிக உயர்ந்த மகிழ்ச்சியை அடை கிறார். மாக மாதம் (ஜன. 21 பிப். 20), அமா வாசைக்குப் பிறகு சதுர்த்தசி நாள் (பதிநான்காம் நாள்) மற்றும் சைத்ர மாதம் (மார்ச் ஏப்ரல்) பூர்ணிமா நாட்களில் காசி காண்டம் பூஜை/அர்ச்சனைக்கு சிறப்பு முக்கி யத்துவம் அளிக்கிறது. இதுபோன்ற நாட்களில் பூஜை செய்வது பக்தர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த புனித லிங்கம் லிங்க புராணம். அத்தி யாயம் 1 மற்றும் 8 இல் குறிப்பிடப் பட்டுள்ளது. பக்தன் பல பாவங்களைச் செய்திருக்கலாம்.

ஆனால் கிருத்திவாசேஸ் வரரை வழிபட்டால் அவனுடைய பாவங்கள் அனைத்தும் நீங்கும் என்று புராணம் கூறுகிறது.

முற்பிறவியில் செய்த பாவங்கள் கூட கிருத்தி வாசேஸ்வரரை பூஜை செய்வ தன் மூலம் நீங்கும்.

க்ருத யுகத்தில் த்ரயம் பக் என்றும், த்ரேதா யுகத்தில் கிருத்தி வாசேஸ்வரரை என் றும், துவாபர் யுகத்தில் மஹேஸ்வரர் என்றும். கலியுகத்தில் ஹஸ்தி பாலேஸ்வரர் என்றும் இறைவன் அறியப் பட்டான் என்று இந்தப் புரா ணம் கூறுகிறது.

இக்கோயிலில் ருத்ரம் பாராயணம் செய்வது மிகவும் சிறப்பானது. பால்குன் கிருஷ்ண சதுர்த்தசி அன்று கிருத்தி வாசேஸ்வரரை கோவிலில் செய்யப்படும் பூஜை, மோட்சத்தை அருளும் மற்றும் பக்தர்களின் அனைத்து விருப் பங்களையும் நிறைவேற்றும். (லிங்க புராணம்). லிங்க புராணம், அத்தியாயம் 15 (வாரணாசி மகாத்ம்யா) மிக முக்கியமான ஆறு லிங்கங்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒன்றுகிருதி வசேஸ் வரர் என்றும் கூறுகிறது.

கிருத்தி வாசேஸ்வரரை கோவில் ஹர்திரத் குளத்திற்கு மேற்கே அமைந்துள்ளது.பண்டைய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஹன்ஸ் தீர்த் தம் இப்போது ஹர் திரத் என்று அழைக்கப்படுகிறது. மேலும் ஒரு காலத்தில் குளம் இருந்த இடத்தில் இப்போது பல கட்டிடங்கள் வந்துள்ளன. பிரசித்தி பெற்ற பிஷ்வேஸ்வரர்கஞ்ச் என்ற இடத்தில் இருந்து இந்த கோயிலை அணுகலாம். இது ஒரு பெரிய மண்டி மற்றும் சைக்கிள் ரிக்ஷாவில் கோயிலுக்கு பயணம் செய்வது வசதியானது.

- Mahalakshmi
Chennai

ARULTHARUMDEIVAM
அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
ஆன்மிக புத்தகத்திற்கு
விளம்பர முகவர்கள் தேவை
விளம்பர ஏஜென்சிகள் தேவை
சிறந்த வருவாய் வாய்ப்பு
தமிழகம் முழுவதும் பிரசித்தி பெற்றது
ஆன்மிக உள்ளங்களை சென்றடைய
சிறந்த ஊடகம்
மேலும் தொடர்பு கொள்ளவும்
9337501889
அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..

கல்வியில் சிறக்க, திருமண தடை நீங்க எதிலும் வெற்றி பெற அருளும்

கடுந்துருத்தி

சிவன் கோவில்களில் ஒருவித்தியாசமான நடைமுறை பல கோவில்களில் கடைபிடிப்பதைப் பார்த்திருப்போம்.

அந்த வகையில் தமிழக சிவன் கோவில்களில் கடைபிடிக்கும் நடைமுறைக்கும், கேரள சிவன் கோவில்களில் கடைபிடிக்கும் நடைமுறைகளும் சற்று வித்தியாசமாக இருக்கும்.

கேரள மாநிலத்தில் பெரும்பாலான சிவன் கோயில்களில் மூலஸ்தானத்தில் சிவன் மட்டும் இருப்பார். அம்மன் இருக்க மாட்டார். இதனாலேயே கர்ப்பகிரகத்தை இடமிருந்து சுற்றும் போது கோமுகி வரையிலும் சென்று, பின் அதே வழி வந்து சாமி தரிசனம் செய்து விட்டு, பின் வலப்புறம் சென்று கோமுகியை வணங்கி விட்டு பின் வெளி வருவார்கள்.

ஏனென்றால் சிவன் அம்பாளுடன் இல்லாமல் தனியாக கர்ப்பகிரகத்தில் இருக்கும் போது சிவனது சடையில் கங்கை இருப்பாள். அபிஷேக தீர்த்தம் எல்லாம் கங்கா தீர்த்தமாக கோமுகி வழியாக வரும்.

கோமுகியை தாண்டினால் கங்கையை தாண்டிய தவறு ஏற்படும். எனவே கோமுகியை தாண்டமாட்டார்கள்.

அந்தவகையில் தம்பதி சமேதராய் கேரளாவில் காட்சிதரும் சிவஸ்தலங்களில் ஒன்று கடுந்துருத்தி.

கோட்டயத்திற்கு அருகே பழமையான மகாதேவர் கோயிலாக கடுத்துருத்தி விளங்குகிறது.

மூலஸ்தானத்தில் சிவன் அம்மனுடன் தம்பதி சமேதராக அனுக்கிரக மூர்த்தியாக அருள் பாலிக்கிறார்.

வைக்கத்தில் ஞானம் கொடுக்கும் தட்சிணா மூர்த்தியாகவும், கடுத்துருத்தியில் சகல சவுபாக்கியங்களை கொடுக்கும் தம்பதி சமேத ராக அனுக்கிர மூர்த்தியாகவும், ஏற்றுமானூரில் வெற்றி கொடுக்கும் காட்டாளன் ரூபத்திலும் சிவன் அருள்பாலிக்கிறார்.

கல்வியில் சிறக்க விரும்புவர்கள், திருமணத் தில் தடை உள்ளவர்கள், எதிலும் வெற்றி பெற விரும்புவர்கள் ஒரே நாளில் இந்த மூன்று தலங்களையும் தரிசித்தால் சிறந்த பலன் உண்டு என்றும், அவர்களுக்கு மறு ஜென்மம் கிடை யாது என்பதும் நம்பிக்கை.

கடுந்துருத்தியில் அருள்புரியும் இறை வனை வணங்கினால் கல்வியில்சிறக்கவும், திருமணத் தடை நீங்கவும், எடுத்த காரியத்தில் வெற்றி பெறவும் பக்தர்கள் இத்தல இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொள்கின்றனர்.

இத்தலம் கிழக்கு பார்த்த திசையில், சிறு குன்றின் மீது அமைந்துள்ளது. இந்த மூன்று கோயில்களுக்கும் சென்று வழிபாடுவதை வழக் கமாக கொண்டிருந்தார் வடக்கன்கூர் ராஜா.

வயதான காரணத்தால் மூன்று கோயில் களுக்கும் சென்று வழிபாடு செய்ய வடக்கன்கூர் ராஜாவால் முடியவில்லை.

எனவே கடுத்துருத்தி கோயிலின் வடக்குப் பகுதியில் வைக்கத்தப்பனை கிழக்கு நோக்கியும், தெற்குப்பகுதியில் ஏற்றமானூரப் பனை மேற்கு நோக்கியும் என மூன்று சிவனை யும் ஒரே தலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்தார்.

எனவே மூன்று கோயில்களுக்கும் செல்ல முடியாதவர்கள் கடுத்துருத்தி மகாதேவர் கோயில் சென்று வழிபாடு செய்து, கோயிலை சுற்றி வந்தாலே மூன்று தலங்களுக்கும் சென்ற பலன் கிடைக்கும் என தல புராணம் கூறுகிறது.

மூன்று சிவஸ்தலங்கள் தோன்றிய வரலாறு

முன்னொரு காலத்தில் கரண் என்ற அசுரன் மோட்சம் அடைய வேண்டும் என்பதற்காக சிவனை நோக்கி கடும் தவம் செய்கிறான்.

தவத்திற்கு மகிழ்ந்த சிவன் கரணுக்கு 3 சிவலிங்கம் கொடுத்து தென் திசையில் பிரதிஷ்டை செய்து பூஜை செய்து வர சொன்னார். வலக்கையில் ஒரு லிங்கமும், இடக்கையில் ஒரு லிங்கமும் எடுத்து கொண்ட அவன் மூன்றாவது லிங்கத்தை எப்படி எடுத்து செல்வது என தெரியாமல், வாயில் கடித்து இருத்தி சென்று பிரதிஷ்டை செய்ததால் இத்தலம் "கடித்துருத்தி' எனப்பட்டது.

இதில் வலக்கையில் இருந்த லிங்கத்தை வியாக்ரபாத மகரிஷியிடம் கொடுத்து வைக்கத் தில் பிரதிஷ்டை செய்ய கூறினான். இடக்கையில் இருந்ததை ஏற்றுமானூர் கோயிலில் கொடுத்து பிரதிஷ்டை செய்யும் படி கூறினான்.

அமைவிடம்: வைக்கத்திற்கும் ஏற்றுமானூருக் கும் இடையில் இத்தலம் அமைந்துள்ளது. வைக் கத்திலிருந்து இத்தலத்திற்கு 14 கி.மீ. இத்தலத்திற்கு ஏற்றமானூருக்கு 14 கி.மீ. என ஒரே தூரம் இருப்பதும் ஒரு சிறப்பம்சம் தான். கோட்டயத்திலிருந்து வடக்கே 30 கி.மீ. தூரத்தில் கடுத்துருத்தி அமைந்துள்ளது. கோட் டயத்திலிருந்து வைக்கம் செல்லும் பஸ்களில் இத்தலம் செல்லலாம்.

- RS ROSHINE
Chennai

துர் சக்திகளை விரட்டி வீட்டிலேயே தெய்வீக சக்தியை வரவழைக்கும்

வாசனைப் பொடியும் தயாரிப்பு முறையும்

வீடுகளில் தெய்வீக மணம் இருந்தால், லட்சுமி கடாட்சம் பெரும், இதற்கு பல்வேறு வாசனை திர வியங்களைப் பயன்படுத்தியிருப்போம், ஆனால் கோவில்களுக்கு உள்ளே செல்லும்போது ஒரு தெய்வீக நறுமணம் வீசும்.

கோவிலில் வீசும் இந்த மணம் ஒருவித ஈர்ப்பு சக்தியை அதிகரிக்கும், இந்த வாசம் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பொருட்களின் வாயிலாகவே ஏற்படுவதாக இருந்தாலும், இதுபோன்ற வாசத்தை வீட்டில் வரவழைப்பது மிக சிரமமாகும்.

கோவிலில் மணக்கும் அந்த வாசத்தை, ஒருசில பொருட்களை வைத்து வீட்டிலேயே தயா ரிக்கலாம். இந்த பூஜை பொடியை தயாரிப்பது வெகு சுலபமாகும்.

இந்த பூஜை பொடியை தயார் செய்து பூஜை அறையில் பயன்படுத்தி பாருங்கள். தெய்வீக மனம் உங்களுடைய வீட்டிலும் எப்போதும் வீசிக் கொண்டே இருக்கும்.

இனம் புரியாத ஒரு மன அமைதி, நிம்மதி என்பது கோவிலுக்கு சென்றால் நம்மை அறியாமலேயே நம் மனதிற்குள் ஏற்படும் அல்லவா.

அதே போல உங்களுடைய வீட்டிலும் நீங்கள் எப்போதும் சந்தோஷமாக இருக்கலாம். இந்தப் பொடியின் வாசத்தால் மனதும் புத்துணர்ச்சியடையும். அந்த அளவிற்கு அற்புதமான நறு மணத்தை கொடுக்கக் கூடிய இந்த பூஜை பொடியை எவ்வாறு தயாரிப்பது என்பதை பார்ப் போம்?

தேவையான பொருட்கள்

கிராம்பு	2 ஸ்பூன்
ஏலக்காய்	ஸ்பூன்
சோம்பு	ஸ்பூன்
சந்தன பொடி	2 ஸ்பூன்
மஞ்சள் பொடி	3 ஸ்பூன்
ஜவ்வாது	1/2 ஸ்பூன்
பச்சை கற்பூரம்	1 ஸ்பூன்
வெட்டிவேர்	2 ஸ்பூன்

தயாரிக்கும் முறை

வெட்டிவேரை சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி போட்டுக் கொள்ளுங்கள். (உங்களுக்கு பூஜை பொடி இன்னும் கொஞ்சம் அதிகமாக தேவை என்றால் இந்த பொருட்களை எல்லாம் இன்னும் கொஞ்சம் கூடுதலாக சேர்த்து கூட அரைத்துக் கொள்ளலாம்.

தேவைக்கு ஏற்ப பொருட்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.

மேற்கண்ட பொருட்களை மிக்ஸி ஜாரில் போட்டுவிட்டு, நன்றாக பவுடர் போன்று நைசாக அரைத்துக்

கொள்ளுங்கள்.

ஏலக்காய், சோம்பு, வெட்டிவேர், இவை கொஞ்சம் திப்பி திப்பியாகத்தான் இருக்கும். ஒரு சல்லடையில் போட்டு இதை சலித்து பொடியை மட்டும் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த பொடியை காற்று வெளியே செல்லாத ஒரு பாட்டிலில் போட்டு மூடி வைத்தால் அப்படியே நறுமணத்தோடு இருக்கும். தேவையான போது தேவையான அளவு எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

எப்படி பயன்படுத்துவது?

இந்த பூஜைப் பொடியை சிறிதளவு ஒரு சிறிய கிண்ணத்தில் போட்டு பன்னீர் ஊற்றி குழைத்து பூஜை பொருட்களுக்கு பொட்டு வைக்க பயன்படுத்தலாம்.

நிலை வாசலில் பொட்டு வைக்க இந்த பொடியை பயன்படுத்தலாம். சுவாமி படங்களுக்கு பொட்டு வைக்கவும் இந்த பொடியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

வீடு துடைக்கும் போது அந்த தண்ணீரில் இந்த பொடியை கொஞ்சமாக போட்டு கலந்தும் வீடு துடைக்கலாம். வீடு முழுவதும் தெய்வீக வாசனை எப்போதும் நிறைந் திருக்கும். செவ்வாய்க் கிழமை வெள்ளிக்கிழமையில் நிலைவாசல் தெளிக்கும் போது அந்த தண்ணீரில் கொஞ்சமாக இந்த பொடியை கலந்து நிலை வாசலில் தெளித்தால் வீட்டிற்கு அவ்வளவு லட்சுமி அம்சம் கிடைக்கும்.

இந்தப்பொடியின் பலன்

- இந்தபூஜைப்பொடியைவீட்டில்பயன்படுத்தினால், அத்தனை தெய்வங்களும் தேவதை களின் அம்சமும் உங்களுடைய வீட்டில் சேர்ந்து நிற்கும்.
- வீட்டில் இல்லாத தெய்வ சக்திகூட நிலை யாக வந்து நிரந்தரமாக குடிகொள் ளும்.
- உங்கள் வீடே கோவிலாக மாறும்.
- வீட்டில் சண்டை சச்சரவுகள் இருக்காது.
- கண் திருஷ்டியால் பெரிய பாதிப்புகள் ஏற் படாது.
- கண்ணுக்கு தெரியாத எந்த கெட்ட சக்தி யாலும் வீட்டிற்குள் நுழைய முடியாது.

– கீதாராஜன், சென்னை.

ஆலயங்களின் ரகசியங்கள்

பெருமாள் கோயிலில் தீர்த்தத்தில் கலக் கப்படும் பச்சைக் கற்பூரம், வாசனை யாகவும் வித்தியாசமான சுவை யுடையதாகவும் இருக்கும். உடலில் ரத்தக் காயம் ஏற்பட்டால், நாம் உடனே காயம் செய்திக் ஆகாமல் இருக்க தடவுகிறோமே பென்சாயின்! அது வேறொன்றுமில்லை, பச்சைக் கற்பூரக் கலவையில் உருவாவது தான்.

• • •

கர்ப்பக்கிருகத்தில் நம்மேல் பாயக்கூடிய பாஸிடிவ் காந்த அலைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் பல கோயில்களில் ஆண்கள் சட்டை அணியாமல் வர வேண் டும் என்று சொல்கிறார்கள். பொதுவாகப் பெண்கள் அணியும் தங்க நகைகளில் கலந் திருக்கும் செம்பின் மூலம் அவர்களுக்கும் இதே எனர்ஜி பாய்கிறது.

• • •

கோயில் பிராகாரத்தை 11 முறை, 108 முறை என்று பிரதட்சணம் செய்யும்போது, நமது உடலின் கொழுப்பு தானாக எரிந்து ஆரோக்கியம் கூடுகிறது. அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சென்று பிரதட்சணம் செய்த தாலேயே சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் தவிர்க்கப்பட்டன.

• • •

சிவனுக்கு அறுகம்புல் சார்த்தி முக்தி பெறலாம்

அறுகுமூ விலைக்கொ ழுந்தை
அரன் றனக் கணிந்தோர் என்றும்
பெறலரிதான போகம்
பெற்றுவாழ்ந்திருந்த பின்னர்
மறிமழுத் தரித்தோன் போல
வடிவுடை யவராய் மன்னி
உறுபொருளாகும் முத்தி
உற்றின்பம் உறுவர் மாதோ

உரை: அறுகம் புல்லினது மூன்று இலையாய் உள்ள கொழுந்தைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், யாரும் பெறுதற்கரிய போகங் களைப் பெற்றுநெடுநாள் வாழ்ந்த பிறகு சிவசாரூபம் பெற்றிருந்து, பின்பு முடிவாக அடையத் தக்க பரமுத்தியை அடைவார்கள்.

குறிப்பு: 'கொழுந்து' என்றதனால், உச்சியில் உள்ளதையே கொய்யவேண்டும் என்பதும், 'மூவிலை' என்றதனால் அது மூன்று இலை யாகவே இருக்கும்படி கொய்யவேண்டும் என்பதும் விளங் கும்.

ஊர் என்றால் எவ்வாறு இருக்கவேண்டும்

திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திரு வெண்ணீறணியாத திருவிலுரும்
பருக்கோடி பத்திமையால் பாடாவூரும்
பாங்கினோடு பத்திகள் இல்லாவூரும்
விருப்பொடு வெண்கொடியும் இல்லாவூரும்
நிதானமும் வெண்கொடி இல்லாவூரும்
அருப்பொடு மலர்பறித்திட்டு (உ)ண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

விளக்கவுரை

- சிவாலயம் இல்லாத ஊர்,
- திருவெண்ணீற்றை விரும்பி அணியாத மக்கள் வாழும் ஊர்,
- உடம்பு வணங்கிப் பக்தியால் பாடல்களைப் பாடாத ஊர்,
- பல ஆலயங்கள் இல்லாத ஊர்,
- மங்கல நிகழ்ச்சியின் போது பந்தல் அமைத்து வெண்சங்கு ஊதாத ஊர்,
- உண்பதற்கு முன் இறைவருக்கு மலர் பறித்து சாத்திவிட்டு உண்ணாத ஊர்,

இவையெல்லாம் ஊர்கள் அல்ல அவையாவும் மிருகங்கள் வாழ்கின்ற காடு என்கிறார் திருநாவுக்கரசர்.

யோகிகளுக்கு மட்டும் காட்சியளிக்கும் கரும்பு வில்

சங்கரன்கோவில் ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி கோவிலில் உள்புறம் தனி தங்கக்கொடிமரத்துடன் தனி கோவிலாக கிழக்கு நோக்கி அமைந்துள்ளது ஸ்ரீ கோமதி அம்மன் கோவில். தனி நந்தி பலிபீடம் அமைத்துள்ளது. ஸ்ரீ கோமதி அம்மன் அழகே உருவானவளாக ஸ்ரீசக்ர பீட பஞ்ச பிரம்மாசனத்தின் மேல் வலது இடை நெளிந்து, வலது கையில் மலர்பாணம் மற்றும் பூச்செண்டு எந்தியவளாக, இடது கையை பூமியைநோக்கி தளரவிட்டவளாக இளமங்கை கோலத்தில் புன்னகை பூத்த முகத்துடன் சர்வாலங்கார பூசிதையாக கருணை பொங்க காட்சி தருகிறாள். மேலும் இது தசமஹா வித்யா பீடத்தில் சோடஷி பீடமாகும். அன்னை சோடஷி ரூபமாக ஸ்ரீ லலிதாமஹா திரிபுர சுந்தரியாக, கமேஸ்வரியாக காட்சி தருகிறாள். அன்னையின் நான்கு கரங்களில் பாசம் அங்குசம் வைத்துள்ள மேல் இரு கைகளும் மற்றும் கரும்பு வில்லும் இங்கு அரூபமாக உள்ளன. அவற்றை நாம் நம் கண்களால் காண முடியாது என்றும், தவ வலிமை பெற்ற யோகிகளால் மட்டுமே அவற்றை காண முடியும் என்றும், யாருக்கு அந்த தரிசனம் கிடைக்கபெறுகிறதோ அவர்களுக்கு அஷ்டமா சித்திகளும் வசப்படும் என்றும் கூறப்படுகிறது.

பூணூல் முக்கியத்துவமும் ஸ்ரீயஜோபவீதேஸ்வரர் வழிபாடும்

பொதுவாக அவிட்ட நட்சத்திரம் கூடிய ஆவணி நாளிதான் பூணூல் அணிவது சிறப் புடையதாகும்.

எல்லோரும் பூணூல் அணியலாம். அணிய வேண்டும் என பல பதிவுகளில் தெரிவித் திருக்கிறோம்.

இது ஒரு பிரிவினர் மட்டுமே அணிவதற் கானது அல்ல. நாம் எல்லோரும் அணிய வேண்டும்

பூணூலில் உள்ள முடிச்சிற்கு பிரம்ம முடிச்சு என்று பெயர்.

இதை கைகளுக்குள் அடக்கிப் பிடித்தவாறு காயத்ரீ மந்திரத்தை ஜபிப்பர்.

பிரம்மச்சாரிகள், மூன்று புரிகளையும், திருமணம் ஆனவர்கள் ஆறு புரிகளையும் கொண்ட பூணூலை அணிய வேண்டும். தாய், தந்தையரை இழந்தோர் ஒன்பது புரிகளை அணிந்திடுக.

பூணூலை எக்காரணம் கொண்டும் கழற்று தல் கூடாது.

பிரளயத்திற்குப் பின் சிருஷ்டி ஏற்பட்டபோது கிராத மூர்த்தியாக அவதாரம் கொண்ட சிவ பெருமான் ஜீவ அணுக்கள் கூடிய குடத்தை மேரு மலையில் வைத்துத் தன் வில் கொண்டு சிருஷ்டி ஜோதியை ஏவியபோது அத்திருக்கடம் உடைந்து அதன் மேலிருந்த பூணூல், மாலை போன்றனவும் பல இடங்களில் தெறித்து விழுந் தன.

இவ்வாறு அதன் பூணூல் விழுந்த இடத்தில் ஆதிசிவனே ஸ்ரீயஜோபவீதேஸ்வரராக (கும்ப கோணம்) எழுந்தருளினார்.

எனவே உபநயனம், ஆவணி அவிட்டம் மட்டுமல்லாது எப்போது பூணூல்



அணிந்திடினும் கும்பகோணம் ஸ்ரீயக்ஞோபவீதேஸ்வரருக்குச் சாற்றிய பூணூலை அணிவதே மிகவும் விசேஷமானதாகும்.

இன்றைக்கும் ஸ்ரீயக்ஞோபவீதேஸ்வரர் திருவடியில் பூணூலை வைத்து அவருக்குச் சாற்றி அதனையே அணிகின்ற நல்வழி முறையைப் பின்பற்றுவோர் பலர் உள்ளனர்.

இதனால் பூணூலில் படிந்திருக்கும் சகல தோஷங்களும் நீங்கி ஸ்ரீகாயத்ரீ மந்திரத்தின் உரு ஏற்றுவதற்காக மிகச் சிறந்த தெய்வீகப் பெட்டகமாக அது மிளிர்கின்றது.

ஸ்ரீயக்ஞோபவீதேஸ்வரரின் சந்நிதியில்தான் ஸ்ரீமகாவிஷ்ணுவே முன்னின்று ஸ்ரீநாரதருக்கு உபநயனம் செய்வித்தார்.

இவ்விடத்தில் மிக எளிமையான முறையில் உபநயனத்தை நடத்திக் குறைந்தது 108 பேருக்கு அன்னதானம் அளித்திட பித்ரு லோக மகரிஷிகளே ஸ்ரீநாரதரின் தலைமையில் நேரில் சூட்சுமாய்ப் பிரசன்னமாகி ஆசிர்வதிக்கின்றனர்.

பெறற்கரிய பாக்கியமிது!

இவ்வாலயத்தில்ஸ்ரீயக்ஞோபவீதேஸ் வரருக்குச் சாற்றிய பூணூலை அணிந்து பிரம்ம முடிச்சை வலது உள்ளங்கைக்குள் இருத்தி காயத்ரீ மந்திரத்தை ஜபிப்போருக்கு ஞாபக சக்தி விருத்தி அடைவதோடு மனக்குழப்பங்கள் நீங்கி வாழ்க்கையில் கணவன், மனைவி, குழந்தைகளிடையே பரஸ்பர அன்பும் ஏற்படும்.

ஆன்மீகத்தில் முன்னிலை பெற விழைவோருக்கு ஸ்ரீகாயத்ரீ மந்திரத்தின் பீஜாட்சர சக்திகள் இன்றியமையாததாகும்

நீரிலோ அல்லது அசந்தர்ப்பங்களினாலோ, பூணூல் அறுந்தாலோ, தொலைந்தாலோ அல்லது கழன்றாலோ அதை மீண்டும் அணியலாகாது. உடனே (ஸ்ரீயஞோபவீதேஸ்வரருக்குச் சாற்றிய) புதிய பூணூலை அணிதல் வேண்டும்.

இதற்காகவே பல பூணூல்களை ஸ்ரீயக்ஞோபவீதேஸ்வரருக்குச் சாற்றிக் கைவசம் வைத்திருப்பது நலம்.

காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் கண்டிப்பாக ஸ்ரீகாயத்ரீ மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

இம்மூன்று வேளைகளிலும் தர்ப்பைப் பாயில் கிழக்கு/அல்லது வடக்கு/மேற்கு நோக்கி அமர்ந்து ஜபித்திட வேண்டும்.

ஏனைய நேரங்களில் எந்நேரமும், எப்போதும் ஸ்ரீகாயத்ரீ மந்திரத்தை ஜபித்திடலாம். 32, 64, 108 என்று குறுகிய எண்ணிக்கைக்குள் முடித்திடாது குறைந்தது 1008 முறையேனும் ஜபித்திடுக மனதினுள் அதாவது மானசீகமாக ஸ்ரீகாயத்ரீ மந்திரத்தை ஜபிக்கப் பழகிடில் ஒருமணி நேரத்தில் நின்று, அமர்ந்த, நடந்த நிலைகளில் கூட குறைந்த்து 300 முறை எவரும் ஜபித்திடலாம்,

ஆரம்பத்தில், கலியுக கர்ம பரி பாலனத்திற்கேற்ப ஒரு நாளில் குறைந்தது 10,000 முறை ஸ்ரீகாயத்ரீ மந்திரத்தை ஜபித்தல் உத்தமமானது என்பதே சித்தர்களின் அருள்வாக்காகும். இதனால் அவரவர்க்குரிய கர்ம சுமைகளின் பளுவை உணராது இறை நினைவுடன் பொழுதில் ஒன்றுவது எளிமையாகிறது.

– எம் அசோக்ராஜா,
திருச்சி–620 015

64 பைரவர்களும் அவர்களுக்குரிய 64 யோகினிகளும்

1 நீலகண்ட பைரவர்
(ஜயா யோகினி)

2 விசாலாக்ஷ பைரவர்
(விஜயா யோகினி)

3 மார்த்தாண்ட பைரவர்
(ஜயந்தி யோகினி)

4 முண்டனப்ரபு பைரவர்
(அபராஜிதா யோகினி)

5 ஸ்வஸ்சந்த பைரவர்
(திவ்யமோகினி யோகினி)

6 அதிஸந்துஷ்ட பைரவர்
(மஹா யோகினி)

7 கேஸர பைரவர்
(ஸித்தமோகினி யோகினி)

8 ஸம்ஹார பைரவர்
(கணேஸ்வர யோகினி)

9 விஸ்வரூப பைரவர்
(ப்ரேதாஸிந்யை யோகினி)

10 நாநாரூப பைரவர்
(டாகினி யோகினி)

11 பரம பைரவர்
(காளி யோகினி)

12 தண்டகர்ண பைரவர்
(காளராத்ரி யோகினி)

13) ஸீதாபத்ர பைரவர்
(நிஸாஸாரீ யோகினி)

14 ஸிரீடன் பைரவர்
(டங்கார்ரீ யோகினி)

15 உன்மத்த பைரவர்
(வேதாள்யா யோகினி)
16 மேகநாத பைரவர்
(ஹூம்காரி யோகினி)
17 மநோவேக பைரவர்
(ஊர்த்துவகேஸி யோகினி)
18 க்ஷேத்ரபாலக பைரவர்
(வ்ருபாட்சி யோகினி)
19 வ்ருபாஷ பைரவர்
(ஸுஷ்காங்கீ யோகினி)
20 கராள பைரவர்
(நரபோஜினி யோகினி)
21 நிர்பய பைரவர்
(பட்சாரி யோகினி)
22 பிஸித பைரவர்
(வீரபத்ரா யோகினி)
23 ப்ரேஷித பைரவர்
(தூம்ராக்ஷி யோகினி)
24 லோகபால பைரவர்
(கலகப்ரியா யோகினி)
25 கதாதர பைரவர்
(கோர ரக்தாக்ஷி யோகினி)
26 வஜ்ரஹஸ்த பைரவர்
(விஸ்வரூபி யோகினி)
27 மஹாகால பைரவர்
(அபயங்க்ரி யோகினி)
28 பிரகண்ட பைரவர்
(வீரகௌமாரி யோகினி)
29 ப்ரளய பைரவர்
(சண்டிகை யோகினி)
30 அந்தக பைரவர்
(வாராஹி யோகினி)
31 பூமிகர்ப பைரவர்
(முண்டதாரணி யோகினி)
32 பீஷண பைரவர்
(ராக்ஷஸி யோகினி)
33 ஸூலபால பைரவர்
(பைரவி யோகினி)
34 குலபால பைரவர்
(த்வாங்க்ஷிணி யோகினி)

35 ருண்டமாலா பைரவர்
(தூம்ராங்கி யோகினி)
36 ரக்தாங்க பைரவர்
(ப்ரேதவாஹினி யோகினி)
37 பிங்களேக்ஷ பைரவர்
(கட்கிணி யோகினி)
38 அப்ரரூப பைரவர்
(தீர்க்க லம்போஷ்யா யோகினி)
39 தாரபாலந பைரவர்
(மாலினி யோகினி)
40 ப்ரஜாபாலந பைரவர்
(மந்த்ர யோகினி)
41 ஸூல பைரவர்
(நீலி யோகினி)
42 மந்த்ரநாயக பைரவர்
(சக்ரிணி யோகினி)
43 ருத்ர பைரவர்
(கங்காளி யோகினி)
44 பிதாமஹ பைரவர்
(புவனேஸ்வரி யோகினி)
45 விஷ்ணு பைரவர்
(த்ரோடகீ யோகினி)

46 வடுகநாத பைரவர்
(மஹாமாரீ யோகினி)
47 கபால பைரவர்
(யமதூதி யோகினி)
48 பூதவேதாள பைரவர்
(காட்டேரி யோகினி)
49 த்ரிநேத்ர பைரவர்
(கேசினி யோகினி)
50 த்ரிபுராந்தக பைரவர்
(மர்த்தினி யோகினி)
51 வரத பைரவர்
(ரோமஜங்கே யோகினி)
52 பர்வதவாகன பைரவர்
(நிர்வாண யோகினி)
53 சசிவாகன பைரவர்
(விஸாலி யோகினி)
54 கபாலபூஷண பைரவர்
(கார்முகி யோகினி)
55 ஸர்வக்ஞ பைரவர்
தோத்யமின யோகினி
56 ஸர்வதேவ பைரவர்
அதோமுக்யை யோகினி)
57 ஈஸாந பைரவர்
(முண்டாக்ரதாரிணி யோகினி)
58 ஸர்வபூத பைரவர்
(வ்யாக்ரிணி யோகினி)
59 கோரநாத பைரவர்
(தூங்க்ஷிணி யோகினி)
60 பயங்கர பைரவர்
(ப்ரேதரூபிணி யோகினி)
61 புக்திமுக்தி பலப்ரத பைரவர்
(தூர்ஜடை யோகினி)
62 காலாக்நி பைரவர்
(கோரா யோகினி)
63 மஹாரௌத்ர பைரவர்
(கராளி யோகினி)
64 தக்ஷிணாபிஸ்தித பைரவர்
(விஷலங்கர்யா யோகினி)

– சிவசக்தி நாப்பிராம்பட்டி
கிருஷ்ணகிரி மாவட்டம்

சஷ்டி நாளின் சிறப்புகள்

சஷ்டி என்பது சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாக கொண்ட காலக்கணிப்புமுறையில், 15 நாட்களுக்கு ஒருமுறை வரும் ஒரு நாளை குறிக்கிறது. இந்த நாட் கள் பொதுவாக திதி என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன.

அமாவாசை நாளுக்கும், பௌர்ணமி நாளுக்கும் அடுத்து வரும் ஆறாவது நாள் சஷ்டி ஆகும். அமாவாசையை அடுத்து வரும் சஷ்டியை சுக்லபட்ச சஷ்டி (அ) வளர்பிறை சஷ்டி என்றும், பௌர்ணமியை அடுத்து வரும் சஷ்டி கிருஷ்ணபட்ச சஷ்டி (அ) தேய்பிறை சஷ்டி என்றும் அழைக்கப்படுகிறது.

மூன்று விரதங்கள்

"வினை தீர்ப்பான் வேலவன்" என்பது வெறும்வார்த்தை அல்ல. முருகப் பெருமானின் அருளால் வினை நீங்கப் பெற்ற அவரது அடியார்களின் அனுபவப் பூர்வ உண்மையான வாக்காகும்.

அப்படிப்பட்ட முருகப்பெருமானுக்கு மூன்று விரதங்கள் முக்கியமாக கடைபிடிக்கப்படுகின்றது. அவை வார விரதம், நட்சத்திர விரதம் மற்றும் திதி விரதம் என்பதாகும். செவ்வாய்க்கிழமைகளில் அனுஷ்டிப்பது வார விரதம்,கிருத்திகை நட்சத்திரத்தில் அனுஷ்டிப்பது நட்சத்திர விரதம், சஷ்டி திதியில் அனுஷ்டிப்பது திதி விரதம்.

சஷ்டி விரதம்:

திருமணம் இல்லாமல் ஒருவருக்கு வாழ்க்கை முழுமையடையாது என்பது போல,குழந்தை இல்லாமல் திருமண வாழ்க்கை நிறைவு பெறாது.

சஷ்டி விரதம் இருந்தால் நல்ல குழந்தைப்பேறு கிடைக்கும். நம் உள்ளத்தில் இறைவன் குடி கொள்வான் என்ற பொருளும் உண்டு.

மாதந்தோறும் வருகிற சஷ்டி மிகவும் விசேஷ மானது. வழிபாட்டுக்கும், பூஜைக்கும் உரிய அற் புதமான சஷ்டி திதியில் முருகப்பெருமானுக்கு விரதம் மேற்கொள்வது எண்ணற்ற பலன்களைத் தரும்.

விரதம் இருக்கும் முறை:

சஷ்டி தினத்தன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, பூஜையறையில் வள்ளி, தெய் வானையுடன் இருக்கும் முருகன் படத்திற்கு வாசம் மிக்க மலர்களை சாற்றி, தீபங்கள் ஏற்றி, ஏதேனும் இனிப்புகளை நைவேத்தியம் செய்து முருகனுக்குரிய கந்த சஷ்டி கவசம், சண்முக கவசம் போன்ற மந்திர பாடல்களை துதித்து அவரை வணங்க வேண்டும்.

முருகனுக்கு பூஜை செய்து விரதத்தை தொடங்கி அருகில் உள்ள முருகன் ஆலயத்திற்கு சென்று வரலாம். இவ்விரத்தத்தை முழு நேரமும் இருக்க முடியாதவர்கள் பால் மற்றும் பழம் போன்ற வற்றை சாப்பிடலாம்.

வேலைக்கு செல்பவர்கள் காலையில் பூஜையை முடித்து விளக்கை மலை ஏற்றி விட்டு, பின்னர் வேலைக்கு தாராளமாக செல்லலாம். மீண்டும் மாலையில் இதேபோல் பூஜை செய்து விரதத்தை முடித்து கொள்ளலாம். வீட்டிலேயே இருப்பவர்கள் விரதம் முடியும் வரை முருகனுக்கு விளக்கு ஏற்றி வைப்பது மிகவும் நல்லது.

சஷ்டி அன்று மாலையில் முருகப்பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் அல்லது எலுமிச்சை சாதம் நைவேத்தியம் செய்து, அக்கம்பக்கத்தாருக்கு வழங்க, வீட்டின் திருஷ்டியெல்லாம் கழிந்துவிடும். கடன் தொல்லைகள் குறையும் என்பது உறுதி.

உண்ணாவிரதத்துடன், மௌன விரதம் சேர்த்து அனுஷ்டிப்பதால் பல நன்மைகள் ஏற்படும். மாலையில் அருகில் உள்ள கோயிலுக்கு சென்று முருகப்பெருமானை வணங்க வேண் டும்.

மேலும் நவகிரக சன்னிதியில் இருக் கும் சுக்கிர பகவானுக்கு தீபங்கள் ஏற்றி வணங்க வேண்டும்.

பின்பு வீடு திரும்பியதும் பூஜை யறைக்கு சென்று, முருகப்பெருமானை வணங்கி உங்களின் சஷ்டி விரதத்தை முடித்து அவருக்கு வைக்கப்பட்ட நைவேத்திய பிரசாதங்களை சாப்பிட்டு விரதத்தை முடிக்கலாம்.

சஷ்டியின் சிறப்புகள்:

சஷ்டி முருகனுக்குரிய சிறந்த நாளாகும். இந்த திதியில் வேலைக்கு சேருதல், வீடு வாகனம் வாங்குதல், மருத்துவத் தொழில் தொடங்குதல் போன்றவை செய்ய உகந்த நாளாகும்.

சஷ்டி விரதம் இருந்தால் குழந்தைப்பேறுகிடைக் கும் என்பது நம்பிக்கை. சஷ்டி விரதம் இருந்தால் நம் உள்ளத்தில் இறைவன் குடி கொள்வார். திருமணம், வாகனம், வீடு ஆகியவற்றை தரக் கூடியவரும் சுக்கிரன் தான். எனவே சஷ்டி திதியில் விரதம் இருந்தால் வேண்டிய அனைத்தையும் பெறலாம்.

16 பேறுகளில் ஒன்றாகவே குழந்தைப்பேறு கருதப்படுகிறது. எனவே குழந்தைப்பேறுடன் மீதமுள்ள 15 பேறுகளையும் அளிக்கும் வல்லமை சஷ்டி விரதத்திற்கு உண்டு.

சஷ்டியில் விரதம் இருந்தால் முருகனின் அருளை பெற்று வாழ்வில் அனைத்து செல்வ வளமும் பெறலாம்.

தேய்பிறை சஷ்டி விரதத்தின் பலன்கள்:

திருமணம் ஆகாமல் இருப்பவர்களுக்கு விரை வில் திருமணம் நடைபெறும்.

ஈடுபடும் காரியங்கள் அனைத்திலும் சிறப்பான வெற்றிகள் உண்டாகும்.

குழந்தை இல்லாதவர்களுக்கு விரைவில் குழந் தைபேறு உண்டாகும்.

பொருளாதாரத்தில் இருந்துவந்த தேக்க நிலை நீங்கும்.

தொழில், வியாபாரங்களில் லாபம் பெருகும், எதிரிகளின் தொல்லை நீங்கும்.

எந்த ஒரு பிரச்சனையையும் தைரிய மாக எதிர்கொள்ளும் மனோபலம்கிடைக் கும். மன உளைச்சல், கவலைகள் நீங்கி மன அமைதியும், நிம்மதியும் உண்டாகும்.

வேலுண்டு வினையில்லை;
மயிலுண்டு பயமில்லை!

– ப. கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி 1

கண்திருஷ்டி பிரச்சனையும், கண் திருஷ்டியை போக்கும் தாந்திரி முறையும்

கண்திருஷ்டி என்பது மகிழ்ச்சியை, சந்தோஷத்தை தடுக்கும் ஒருவித தடைக்கல் என்று கூறலாம், இந்த கண்திருஷ்டி என்பது ஒருவரை அறியாமலேயே மற்றவருக்கு பாதிப்புஏற்படுத்தும்.

கண் திருஷ்டியை போக்கி விட்டால் போதும் சந்தோஷத்திற்கு பின்னால் பெரிய கஷ்டம் எதுவும் வராமல் இருக்கும்.

அதற்கு ஒரு தாந்திரீக ரீதியான முறை உள்ளது. இந்த பரிகாரத்தை செய்ய நமக்கு தேவை 1 மா இலை, வேப்ப எண்ணெய், கசப்பான சம்பவங்களை பொசுக்கூடிய தன்மை வேப்பெண்ணெய்க்கு உண்டு.

ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே ஒரு மா இலையின் மேலே வேப்பெண்ணெயை முழுமையாக தடவிவிட்டு இந்த இலையை ஒரு தட்டின் மேல் வைத்து வீட்டின் ஏதாவது ஒரு மூலையில் வைத்துவிடுங்கள். இது ஞாயிற்றுக்கிழமை முழுவதும் உங்களுடைய வீட்டில் அப்படியே இருக்கட்டும்.

ஞாயிற்றுக்கிழமை இரவு தூங்க செல்வதற்கு முன்பாக ஒன்பது மணிக்கு மேல் இந்த மா இலையைக் கொண்டு போய் அப்படியே நிலை வாசலுக்கு வெளியே வைத்து ஒரு கற்பூரத்தை வைத்து எரித்து விடுங்கள்.

உங்கள் வீட்டை பிடித்திருக்கும் கண்திருஷ்டி கெட்ட சக்தி எதிர்மறை ஆற்றல் அனைத்தும் இந்த மாஇலையோடு பொசுங்கிப் போய்விடும்.

மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை இப்படி செய்தாலே போதும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் குறையும். சந்தோஷம் அதிகரிக்கும். மன நிம்மதி கிடைக்கும். பணப் பிரச்சனை நீங்கும். கடன் சுமை குறையும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகள் உங்கள் சொல்படி கேட்டு நடப்பார்கள்.

அக்கம்பக்கம் வீட்டில் இருப்பவர்களுடைய எதிர் மறையான எண்ணங்கள் உங்கள் குடும்பத்தை தாக்காது. இந்த பரிகாரத்தை மூன்று மாதங்கள் செய்து பாருங்கள் நல்ல பலன் கிடைக்கும்.

இதே போல உங்களுடைய வீட்டின் நிலை வாசலில், வெள்ளிக்கிழமை பூஜை செய்வதற்கு முன்பாக மாஇலைத் தோரணம் கட்டி வரும் பழக்கத்தை கொண்டு வாருங்கள். இது உங்களுடைய வீட்டிற்கு முழுமையான நிரந்தரமான லட்சுமி கடாட்சத்தை கொடுக்கும்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu - 600081. Editor: R S ROSHINE

ஸர்வேஜநா சுகிநோபவந்து

சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு

AJANTHA

TRADITIONAL THAMBULA BETEL NUTS

அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு

అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబుళ వక్కపలుకులు

அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!

அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!

RAVIKUMAR AND COMPANY
21, North Mada Street, Viilivakkam, Chennai – 600 049
PH: 044 26171341 | emaiir ajanthasupari@hotmail.com

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,

Whatsup no.7092894609

TamilnaduEpaper.com